அனைத்து வணிகவியல் ஆசிரிய பெருமக்களுக்கும் வணக்கம்

நமது வணிகவியல் ஆசிரிய பெருமக்களுக்காக நம் மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்ட வணிகவியல் ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் **எந்தவித இலாப நோக்கமில்லாமல் 12 ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் (தமிழ் வழி) Notes of Lesson தயாரிக்கப்பட்டுள்ளது**

அரசு நம்மிடம் எதிர்பார்க்கும் அனைத்து தலைப்புகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது

இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வணிகவியல் ஆசிரியர்களுக்கும் நன்றி

மேலும் இதனை தயாரித்தவர்கள் அவர்களின் பள்ளி மற்றும் மாவட்ட சூழலுக்கு ஏற்றவாறு தயாரித்துள்ளனர். இதனை உங்கள் பள்ளிக்கு ஏற்றவாறு நீங்கள் மாற்றி எழுதிக்கொள்ளவும்

**இதனை தயாரித்தவர்கள் அவர்களின் விடுமுறை நாட்களில் நமக்காக தயாரித்துள்ளனர்.**

இதில் ஏதேனும் குறையோ அல்லது மாற்றமோ கூற நினைத்தால் சம்மந்தப்பட்ட ஆசிரியர்க்கோ அல்லது எனக்கோ நீங்கள் **(தயாரித்தவர் மனம் புண்படாதவகையில்)** தகவல் தெரிவிக்கலாம்

மீண்டும் ஒரு முறை இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வணிகவியல் ஆசிரியர்களும் நன்றி

இவண்

தொகுப்பாளர்

M. முத்துச்செல்வம்

MLWA HSS

மதுரை

9842104826

# 12 ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் (TM)

Notes of Lesson தயாரித்துள்ள ஆசிரிய பெருமக்களின் பெயர் விவரம்

| பாடம் | ஆசிரியர் பெயர் | பணி புரியும் பள்ளி | மொபைல் எண் |
|---|---|---|---|
| L 1 | M.Mahalakshmi | Govt Madura Sugars HSS Pandiarajapuram Madurai (Dist) | 80725 22280 |
| L 2 | S. M. AHAMED SULAIMAN | CENTRAL HSS KAYALPATNAM THOOTHUKUDI DISTRICT | 87540 78521 |
| L 3 | S. M. AHAMED SULAIMAN | CENTRAL HSS KAYALPATNAM THOOTHUKUDI DISTRICT | 87540 78521 |
| L 4 | S. Kalaiselvi | Koodakovil nadars hr sec school | 7845088781 |
| L 5 | S. Kalaiselvi | Koodakovil nadars hr sec school | 7845088781 |
| L 6 | DR M. BALA SHUNMUGANANTHAM | SOURASHTRA (B) HSS MADURAI | 6380848 005 |
| L 7 | S. Anbu | CSM MPL HSS Pillaiyarpalayam Kancheepuram (Dist) | 97868 51452 |
| L 8 | Anusuya | Melakottai Madurai (Dist) | 99429 52873 |
| L 9 | Anusuya | Melakottai Madurai (Dist) | 99429 52873 |
| L 10 | M.MuthuSelvam | MLWA HSS Madurai 625 001 | 9842104826 |

வகுப்பு:12 Prepared by: M.Mahalakshmi
பாடம்: **கணக்குப்பதிவியல்** Govt Madura Sugars HSS Pandiarajapuram
தேதி: ஜூன் முதல் வாரம் Madurai (Dist). Cell: 80725 22280

**அலகு1 முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து கணக்குகள்**

**தலைப்பு: இலாபநட்டஅறிக்கை**

**கற்றல் நோக்கங்கள்:**

முழுமை பெறா பதிவேடுகளில் இயல்புகள் மற்றும் குறைபாடுகளை மாணவர்கள் புரிந்து கொள்ளுதல் இலாபநட்ட அறிக்கைவாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதுபற்றி மாணவர் அறிந்து கொள்ளல்

**கற்றல் விளைவுகள்:**

முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக எந்த வகையான நிறுவனங்கள் பராமரிக்கின்றன என்பதை தெரிந்து கொள்ளுதல்

இலாபநட்ட அறிக்கைவாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிதல்

**கற்பித்தல் உபகரணங்கள்:**

Ppt, Videos, QR Code, Online games and Online MCQ

**முன்னறிவு:**

கணக்கியலின் பொன்னானவிதிகள், இரட்டைபதிவுமுறை மற்றும் அதன் கொள்கைகள், கணக்குகளின் வகைகள், இறுதிகணக்குகள் ஆகியவற்றை நினைவு கூறுதல்

**பாட அறிமுகம்**

கணக்கேடுகள் முழுமையாக இரட்டைபதிவு முறையில் தயாரிக்கப்படாத போது அவ்வேடுகள் முழுமைபெறா பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக ரொக்ககணக்கு மற்றும் ஆள்சார்கணக்கும் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன. சிறிய அளவிலான தனியாள்வணிகம் முழுமைபெறாபதிவேடுகளை பராமரிக்கின்றன

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**பாட விளக்கம் :**

முழுமை பெறா பதிவேடுகளின் பொருள்கணக்கேடுகள் இரட்டைப்பதிவுமுறையின் படி பராமரிக்கப்படாத போது அந்தபதிவேடுகள் முழுமைபெறா கணக்கியல்பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன

**முழுமை பெறா பதிவேடுகளில் இயல்புகள்**

தன்மை, பராமரிக்கப்படும் கணக்கின்வகைகள், சீரற்றத்தன்மை, நிதிநிலை அறிக்கைகள் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலையை வெளிப்படுத்தாது, பொருந்தும்தன்மை, வியாபார நடவடிக்கைகளுடன் உரிமையாளரின் நடவடிக்களும் பதியப்படுதல்

**ஆசிரியர் செயல்பாடு**

**முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள்**

பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாமல் இருப்பாய்வு தயாரிப்பதுகடினம்

வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனை கண்டறிவதுகடினம்

வியாபாரத்தின் நிதியிலேயே கண்டறிதல் கடினம் தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது அரசு மற்றும் பிற அதிகாரிகளுக்கு ஏற்புடையது அல்ல

முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து நிலை அறிக்கைவாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிதல்

**இறுதிமுதல் + எடுப்புகள்- கூடுதல்முதல் - தொடக்கம்முதல் = இலாபம் / நட்டம்**

**நிலை அறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படி நிலைகள்**

i)ஆண்டு தொடக்கத்தில் உள்ள மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளை கொண்டு தொடக்கநிலை அறிக்கை தயாரித்து தொடக்கமுதலை கண்டறியவும்

ii)கணக்காண்டி இறுதியில் தேய்மானம் வாராக்கடன் கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள் போன்றவற்றிற்கு தேவையான சரிகட்டுதல்களை செய்த பின் இறுதிநிலையறிக்கை தயாரித்துஇறுதிமுதல்கண்டறியவும்

iii) இறுதிமுதலுடன் எடுப்பு தொகையினைகூட்டவும்

iv) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலிலிருந்து தொடக்கமுதலை கழித்து இலாபம் அல்லது நட்டத்தினை கண்டறியவும்

அ) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலானது தொடக்கமுதலைவிட அதிகமாக இருந்தால் அது இலாபத்தை குறிக்கும்

ஆ) சரிகட்டப்பட்ட இறுதி முதலானது தொடக்க முதலைவிட குறைவாக இருந்தால் அது நட்டத்தை குறிக்கும்

**இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிவம்**

**..............ல் முடிவடையும் ஆண்டிற்கான இலாப / நட்ட அறிக்கை**

| **விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|
| அவ்வாண்டின் இறுதி முதல் | XXX |
| கூட்டுக அவ்வாண்டின் எடுப்புகள் | XXX |
| | XXX |
| கழிக்க அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | XXX |
| சரிகட்டப்பட்ட கூடுதல் முதல் | XXX |
| கழிக்க தொடக்க முதல் | XXX |
| **அவ்வாண்டின் இலாபம் / நட்டம்** | **XXX** |

**மாணவர் செயல்பாடு**

மாணவர்களை பாடபுத்தகத்தில் படிக்கச்சொல்லி புதியவார்த்தைகள் மற்றும் கலைச்சொற்களை அடிக்கோடிட சொல்லி படிக்கவைத்தல்.

அருகிலுள்ள சில்லரை வணிகத்தை (பெட்டிக்கடை) ஒரு மணி நேரம் பார்வையிடுங்கள் அவர்கள் விற்பனை நடைபெற்ற உடனேயே அதை பதிவு செய்கிறார்களா? விற்பனை நடைபெற்ற உடனேயே பதிவுசெய்கிறார்களா விற்பனை செலவுகள் மற்றும் இலாபத்தை விற்பனையாளர்கள் எவ்வாறு கண்காணிக்கிறார்கள் என்பதை கேட்டு அறியுங்கள்

**சிந்தனைக்கு**

கூடுதல் முதலாக ரூ. 45000 அவ்வாண்டில் கொண்டு வரப்பட்டது கூடுதல்முதல் கொண்டு வரவேண்டியதன் தேவைக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை நினைவு கூறவும்

**வலுவூட்டல்**

புதிய மற்றும் கடினமானகருத்துக்கள் Video மற்றும் QR Scan மூலம்மீண்டும்விளக்குதல்

இறுதிமுதல் + எடுப்புகள் - கூடுதல்முதல் - தொடக்கம்முதல் = இலாபம் /நட்டம்

**மதிப்பீடு**

**LOT:எளிய சிந்தனைவினா**

சொத்துக்கள் = முதல்+ ............

**MOT: நடுத்தர சிந்தனைவினா**

முழுமை பெறா பதிவேடுகளைபொதுவாக பராமரித்து வருவது

அ) நிறுமம் ஆ) அரசு இ) சிறியஅளவிலானதனியாள்வணிகம் ஈ) பன்னாட்டுநிறுவனங்கள்

**HOT: உயர் சிந்தனைவினா**

உரிமையாளரின் சொத்துக்கள் ரூபாய் 85000 மற்றும் பொறுப்புகள் ரூபாய் 21,000 எனில் அவருடைய முதல் தொகை யாது?

**குறைதீர் கற்றல்**

மெல்லகற்கும் மாணவர்களைகண்டறிந்து எளியமுறையில் சிறியகணக்குகளை கற்றுக்கொடுத்தல்

| இறுதிமுதல் | எடுப்பு | கூடுதல்முதல் | தொடக்கமுதல் | இலாபம் / நட்டம் |
|---|---|---|---|---|
| 10000 | 40000 | 20000 | 90000 | ? |
| ? | 30000 | 40000 | 80000 | 20000 |
| 70000 | ? | 30000 | 40000 | 10000 |

**தொடர் பணி**

பயிற்சி கணக்கு செய்தல்

*****************************************************************************

**வகுப்பு:12**

**பாடம்: கணக்குப்பதிவியல்**

**தேதி: ஜூன் இரண்டாம் வாரம்**

Prepared by: M.Mahalakshmi
Govt Madura Sugars HSS Pandiarajapuram
Madurai (Dist). Cell: 80725 22280

**அலகு1 முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து கணக்குகள்**

**தலைப்பு: நிலையறிக்கை தயாரித்தல்**

**கற்றல் நோக்கங்கள்:**

நிலைஅறிக்கை தயாரித்தல் மற்றும் முழுமைபெறா பதிவேடுகளில் இருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல்

நிலை அறிக்கை வாயிலாக தொடக்க முதல் மற்றும் இறுதிமுதல் கணக்கிடுதல்

**கற்றல் விளைவுகள்:**

மாணவர்களால் நிலை அறிக்கை தயாரித்து முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கீடும் முறைகள் பற்றி அறிந்து கொள்ளமுடியும்

நிலை அறிக்கை வாயிலாக தொடக்கமுதல் இறுதி முதல் கணக்கிடுவது பற்றி புரிந்து கொள்ளமுடியும்

**கற்பித்தல் உபகரணங்கள்:**

Ppt, Videos, QR Code, Online games and Online MCQ

**முன்னறிவு:**

மாணவர்களிடம் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பட்டியலை கேட்டு ஆர்வமூட்டுதல்

தொடக்கம் முதல் மற்றும் இறுதிமுதல் ஏன் கணக்கிட வேண்டும் என்று கேள்வி கேட்டு ஆர்வமூட்டுதல்

**பாடஅறிமுகம்**

நிலை அறிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக்காட்டும் ஒரு அறிக்கையாகும்

சொத்துக்களின் இருப்புகள் வலதுபக்கமும் மற்றும் பொறுப்புகளின்இருப்புகள் இடப்பக்கமும் காண்பிக்கப்படும்

இது முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து ஒரு வியாபார நிறுவனத்தின் ஒரு குறிப்பிட்ட நாளுக்கான முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது

இது இருப்புநிலைகுறிப்பில் போன்று தோற்றமளிக்கும் மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புகளின் வேறுபாட்டு தொகை முதலாக எடுத்துக்கொள்கிறது

**முதல் = சொத்துக்கள்- பொறுப்புகள்**

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**பாட விளக்கம்** :

நிலை அறிக்கை சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் பட்டியலாக இருந்தாலும் இது இருப்புநிலைகுறிப்பு என்று அழைக்கப்படுவதில்லை

**ஆசிரியர் செயல்பாடு**

**நிலை அறிக்கையின் படிவம்**

**............... அவர்களின் ஏடுகளில்...............நாளைய நிலை அறிக்கை**

| **பொறுப்புகள்** | **ரூ.** | **சொத்துக்கள்** | **ரூ.** |
|---|---|---|---|
| பற்பலகடனீந்தோர் | XXX | கைரொக்கம் | XXX |
| செ.மா.சீ. | XXX | வங்கிரொக்கம் | XXX |
| கொடுபடவேண்டிய செலவுகள் | XXX | பற்பலகடனாளி | XXX |
| வங்கி மேல்வரைப் பற்று | XXX | பெ.மா.சீ. | XXX |
| | | சரக்கிருப்பு | XXX |
| | | முன்கூட்டி செலுத்திய செலவுகள் | XXX |
| **முதல் (இருப்புக்கட்டும்தொகை)** | **XXX** | நிலைச்சொத்துக்கள் | XXX |
| | **XXX** | | **XXX** |

**மாணவர் செயல்பாடு**

மாணவர்களை பாடபுத்தகத்தை படிக்கச்சொல்லி புதிய வார்த்தைகள் மற்றும் கலைச்சொற்களை அடிக்கோடு இடச்சொல்லி படிக்கவைத்தல்

சிறு விளையாட்டு மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கண்டறிய செய்தல்

**வலுவூட்டல்**

நிலைஅறிக்கை வாயிலாக தொடக்கமுதல் மற்றும் இறுதிமுதல் கணக்கிடுதல் பற்றிய வீடியோ மற்றும் க்யூ ஆர்கோடு மூலம் மீண்டும் விளக்குதல்

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினா**

நிலைஅறிக்கை என்றால்என்ன?

**நடுத்தர சிந்தனை வினா**

நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைகுறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தரவும்

**உயர் சிந்தனைவினா**

தொடக்கநிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது

அ) தொடக்கமுதல் கண்டறிய ஆ) இறுதிமுதல் கண்டறிய இ) அவ்வாண்டில் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டில் நட்டம் கண்டறிய

**குறைதீர் கற்றல்**

மெல்ல கற்கும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு எளியமுறையில் சிறிய கணக்குகளை கற்றுக்கொடுத்தல்.

**தொடர்பணி**

பயிற்சி கணக்கு செய்தல்

---

**வகுப்பு:12**

**பாடம்: கணக்குப்பதிவியல்**

**தேதி: ஜூன் 3ம் வாரம்**

Prepared by: M.Mahalakshmi
Govt Madura Sugars HSS Pandiarajapuram
Madurai (Dist). Cell: 80725 22280

**அலகு1 முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து கணக்குகள்**

**தலைப்பு: மொத்த கடனாளிகள் கணக்கு தயாரித்தல்**

**கற்றல் நோக்கங்கள்:**

மாணவர்கள் மொத்த கடனாளிகள் கணக்கு மற்றும் பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்தல்

முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து இறுதிக்கணக்குகள் தயாரித்தல்

**கற்றல் விளைவுகள்:**

மாணவர்களால் மொத்த கடனாளிகள் கணக்கு மற்றும் பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிப்பது பற்றி அறிந்து கொள்ள முடியும்

விடுபட்ட தகவலிலிருந்து கடன் விற்பனை மற்றும் பெறப்பட்ட பெறுவதற்குரிய மாற்று சீட்டு இருப்புகளை கண்டறிய முடியும்

**கற்பித்தல் உபகரணங்கள்:**

Ppt, Videos, QR Code, Online games and Online MCQ

**முன்னறிவு:**

விற்பனை என்றால் என்ன? விற்பனையை எத்தனை வகைகளாக பிரிக்கலாம்? என கேள்விகேட்டு ஆர்வமூட்டுதல்

கடன் விற்பனைஎன்றால்என்ன? எவ்வாறு கணக்கிடலாம்? என்று கேட்டு ஆர்வம் மூட்டுதல்

**பாடஅறிமுகம்**

தரப்பட்ட தகவலிலிருந்து விடுபட்ட தொகைகளைகண்டறிய வேண்டும்

மொத்த கடனாளிகள் மற்றும் பெறுவதற்குரிய மாற்றுசீட்டு கணக்குகளை தயாரிப்பது மூலம் கடன்விற்பனை மற்றும் பெறப்பட்ட பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டுகள் இருப்புகளை கண்டறியலாம்

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**ஆசிரியர்செயல்பாடு**

| **விடுபட்டதகவல்** | **கணக்கின்பெயர்** |
|---|---|
| கடன்விற்பனை | மொத்தகடனாளிகள்கணக்குகள் |
| கடன்கொள்முதல் | மொத்தகடனீந்தோர்கணக்குகள் |
| தொடக்கமுதல் | தொடக்கநிலைஅறிக்கை |
| இறுதிமுதல் | இறுதிநிலைஅறிக்கை |
| பெறப்பட்ட பெறுவதற்குரிய மாற்றுசீட்டுகள் | பெறுவதற்குரிய மாற்றுசீட்டு கணக்குகள் |
| ஏற்கப்பட்ட செலுத்தக்கூடிய மாற்றுசீட்டுகள் | செலுத்துவதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்குகள் |

**முழுமைபெறா பதிவேடுகளில் இருந்து இறுதிகணக்குகளை தயாரித்தல்**

கணக்கேடுகள் முழுமைபெறாதவையாக இருக்கும் போது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்கள் முழுமையாக இருக்காது

எனவே வியாபார இலாபநட்ட கணக்கு மற்றும் இருப்புநிலைகுறிப்பு ஆகியவற்றை தயாரிப்பது சிரமமாக இருக்கும் ஆனால் தரப்பட்டிருக்கின்ற தகவல்களைக் கொண்டு விடுபட்ட தகவல்களை கண்டுபிடித்த பிறகு இறுதி கணக்குகளை தயாரிக்க முடியும்

**முழுமைபெறா பதிவேடுகளில் இருந்து இறுதிகணக்குகளை தயாரிக்கும் போது பின்பற்றவேண்டிய படிநிலைகள்**

தொடக்கம் முதல் அறிவதற்கு தொடக்கநிலை அறிக்கை தயாரிக்க வேண்டும்

தரப்பட்ட தரவுகளில் இருந்து விடுபட்ட தொகைகளை கண்டறிய வேண்டும்

எடுத்துக்காட்டு ரொக்ககொள்முதல் மற்றும் ரொக்கவிற்பனை போன்ற விடுபட்ட தகவல்களை கண்டறிய ரொக்கஏட்டினை தயாரிக்க தயாரிப்பது அவசியம்

மொத்த கடனாளிகள் மற்றும் மொத்த கடனீந்தோர்கணக்குகளை தயாரிப்பது மூலம் கடன்விற்பனை மற்றும் கடன்கொள்முதல் ஆகியவற்றை கண்டறியலாம்

பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் செலுத்ததற்குரிய மாற்றுச்சீட்டு கணக்குகளை தயாரிப்பதன்மூலம் பெறப்பட்ட பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டுகள் மற்றும் ஏற்கப்பட்ட செலுத்ததற்குரிய மாற்றுச்சீட்டுகள் இருப்புகளைகண்டறியலாம்

இறுதியாக வியாபாரம் மற்றும் இலாபநட்டகணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றை தயாரிக்கவேண்டும்

**மொத்தகடனாளிகள்படிவம்**

**மொத்தகடனாளிகள்கணக்கு**

| **விவரம்** | **ரூ.** | **விவரம்** | **ரூ.** |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ(தொடக்கஇருப்பு) | XXX | ரொக்கக/கு(பெற்றது) | XXX |
| **விற்பனைக/கு (கடன்விற்பனை)** | **XXX** | வங்கிக/கு(காசோலைபெற்றது) | XXX |
| வங்கிக/கு(காசோலைமறுக்கப்பட்டது) | XXX | அளித்ததள்ளுபடிக/கு | XXX |
| பெ.மா.சீ. க/கு(மாற்றுசீட்டுமறுக்கப்பட்டது) | XXX | விற்பனைதிருப்பக/கு | XXX |
| | | வாராக்கடன்க/கு | XXX |
| | | பெ.மா.சீ. க/கு (மாற்றுசீட்டுபெற்றது) | XXX |
| | | இருப்புகீ/இ | XXX |
| | **XXX** | | **XXX** |

**மொத்தவிற்பனை= ரொக்கவிற்பனை + கடன்விற்பனை**

**பெறுவதற்குரிய மாற்று சீட்டு கணக்கின் படிவம்**

**பெறுவதற்குரிய மாற்றுசீட்டு கணக்கு**

| **விவரம்** | **ரூ.** | **விவரம்** | **ரூ.** |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ(தொடக்கஇருப்பு) | XXX | ரொக்க /வங்கிக/கு (பெ.மா.சீ.ஏற்றுக்கொள்ளப்பட்டது) | XXX |
| **பற்பலகடனாளிக/கு (அவ்வாண்டில்பெ.மா.சீ. பெற்றது)** | **XXX** | பற்பலகடனாளிக/கு (மாற்றுசீட்டுமறுக்கப்பட்டது) | |
| | | இருப்புகீ/இ | XXX |
| | XXX | | XXX |

**மாணவர் செயல்பாடு**

மாணவர்களை பாடபுத்தகத்தை படிக்கச்சொல்லி புதியவார்த்தைகள் மற்றும் கலைச்சொற்களை அடிக்கோடு இடச்சொல்லி படிக்க வைத்தல்

சிறுவிளையாட்டு மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கண்டறிய செய்தல்

**வலுவூட்டல்**

மொத்தகடனாளிகள் கணக்கிலிருந்து கடன்விற்பனை கண்டறியப்படுகிறது

**மொத்தவிற்பனை = ரொக்கவிற்பனை + கடன்விற்பனை**

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினா**

இரட்டைபதிவுமுறை பின்பற்றாதபோது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளை தருக

**நடுத்தர சிந்தனை வினா**

முழுமைபெறா பதிவேடுகளில் இருந்து கடன்விற்பனை தொகையை எவ்வாறு கண்டறியப்படுகிறது

**உயர் சிந்தனை வினா**

கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.30,000 பெற்ற ரொக்கம் ரூ .100000 கடன் விற்பனை ரூ. 90000 கடனாளிகள் இறுதி இருப்பு ?

**குறைதீர் கற்றல்**

மெல்ல கற்கும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு எளிய முறையில் சிறிய கணக்குகளை கற்றுக் கொடுத்தல்.

**தொடர் பணி**

பயிற்சி கணக்கு செய்தல்

---

**வகுப்பு:12** Prepared by: M.Mahalakshmi

**பாடம்: கணக்குப்பதிவியல்** Govt Madura Sugars HSS Pandiarajapuram

**தேதி: ஜூன் 4ம் வாரம்** Madurai (Dist). Cell: 80725 22280

**அலகு1 முழுமை பெறா பதிவேடுகளில் இருந்து கணக்குகள்**

**தலைப்பு : மொத்த கடனீந்தோர் கணக்கு தயாரித்தல்**

**கற்றல் நோக்கங்கள்:**

மாணவர்கள் மொத்த கடனீந்தோர் கணக்குகள் மற்றும் செலுத்தத்துக்குரிய மாற்றுச்சீட்டு கணக்குகளை தயாரித்தல்

முழுமைபெறா பதிவேடுகளில் இருந்து இறுதிகணக்குகள் தயாரித்தல்

**கற்றல் விளைவுகள்:**

மாணவர்களால் மொத்த கடனீந்தோர் கணக்கு மற்றும் செலுத்தக்கூடிய மாற்றுசீட்டு கணக்கு தயாரித்தல் பற்றி அறிந்து கொள்ள முடியும்

விடுபட்ட தகவல்களில் இருந்து கடன்கொள்முதல் மற்றும் ஏற்கப்பட்ட செலுத்ததிற்குரிய மாற்றுசீட்டு இருப்புகளை கண்டறிவது பற்றி தெரிந்து கொள்ள முடியும்

**கற்பித்தல் உபகரணங்கள்:**

Ppt, Videos, QR Code, Online games and Online MCQ

**முன்னறிவு:**

கொள்முதல் என்றால் என்ன? கொள்முதலை எத்தனை வகைகளாக பிரிக்கலாம் ? என கேள்வி கேட்டு ஆர்வமூட்டுதல்

கடன் கொள்முதல் என்றால் என்ன? எவ்வாறு கணக்கிடலாம் என்று கேட்டு ஆர்வமூட்டுதல்

**பாடஅறிமுகம்**

தரப்பட்ட தகவலில் இருந்து விடுபட்ட தொகையினை கண்டறியவும் மொத்த கடனீந்தோர் மற்றும் செலுத்துதற்க்குரிய மாற்றுசீட்டு கணக்குகளை தயாரிப்பதன் மூலம் கடன்கொள்முதல் மற்றும் ஏற்கப்பட்ட செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டுகள் இருப்புகளை கண்டறியலாம்

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**ஆசிரியர் செயல்பாடு**

**மொத்த கடனீந்தோர் கணக்கின் படிவம்**

| **விவரம்** | **ரூ.** | **விவரம்** | **ரூ.** |
|---|---|---|---|
| ரொக்கக/கு(செலுத்தியது) | XXX | இருப்புகீ/கொ(தொடக்கஇருப்பு) | XXX |
| வங்கிக/கு(காசோலைசெலுத்தியது) | XXX | **கொள்முதல்க /கு (கடன்கொள்முதல்)** | **XXX** |
| செ.மா.சீ.க/கு (மாற்றுசீட்டுஏற்கப்பட்டது) | XXX | வங்கிக/கு(காசோலைமறுக்கப்பட்டது) | XXX |
| பெற்றதள்ளுபடிக / கு | XXX | செ.மா.சீ.க/கு(மாற்றுசீட்டுமறுக்கப்பட்டது) | XXX |
| கொள்முதல்திருப்பக / கு | XXX | | |
| இருப்புகீ/இ (இறுதிஇருப்பு) | XXX | | |
| | **XXX** | | **XXX** |

**செலுத்ததற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கின் படிவம்**

**செலுத்ததற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு**

| **விவரம்** | **ரூ.** | **விவரம்** | **ரூ.** |
|---|---|---|---|
| ரொக்க /வங்கிக/கு (செ.மா.சீ. செலுத்தியது) | XXX | இருப்புகீ/கொ(தொடக்கஇருப்பு) | XXX |
| பற்பலகடனீந்தோர்க/கு (செ.மா.சீ. மறுக்கப்பட்டது) | XXX | **பற்பலகடனீந்தோர்க/கு (செ.மா.சீ. ஏற்கப்பட்டது))** | **XXX** |
| இருப்புகீ/இ (இறுதிஇருப்பு) | XXX | | |
| | **XXX** | | **XXX** |

மொத்தகொள்முதல் = ரொக்ககொள்முதல் + கடன்கொள்முதல்

**மாணவர்செயல்பாடு**

மாணவர்களை பாடபுத்தகத்தை படிக்கச்சொல்லி புதிய வார்த்தைகள் மற்றும் கலைச்சொற்களை அடிக்கோடு இடச்சொல்லி படிக்க வைத்தல்

சிறு விளையாட்டு மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கண்டறிய செய்தல்

**வலுவூட்டல்**

மொத்த கடனீந்தோர் கணக்கிலிருந்து கடன்கொள்முதல் கண்டறியப்படுகிறது

மொத்தகொள்முதல்= ரொக்ககொள்முதல் + கடன்கொள்முதல்

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினா**

கடன்கொள்முதல் தொகையை கணக்கிட தயாரிக்கப்படுவது

அ) மொத்த கடனாளிகள் கணக்கு ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு இ) பெறுவதற்குரிய மாற்றுசீட்டு கணக்கு ஈ) செலுத்துவதற்குரிய மாற்றுசீட்டு கணக்கு

**நடுத்தர சிந்தனை வினா**

மொத்தகொள்முதல் = ரொக்ககொள்முதல்+ ..............

**உயர் சிந்தனை வினா**

கடனீந்தோர் தொடக்க இருப்பு ரூ. 30,000 அளித்த ரொக்கம் ரூ.100000 கடன் கொள்முதல் ரூ.90000 கடனீந்தோர் இறுதிஇருப்பு ?

**குறைதீர் கற்றல்**

மெல்ல கற்கும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு எளியமுறையில் சிறிய கணக்குகளை கற்றுக்கொடுத்தல்.

**தொடர்பணி**

பயிற்சிகணக்குசெய்தல்

---

வகுப்பு:12

பாடம்: கணக்குப்பதிவியல்

தேதி: ஜூலை முதல் வாரம்

அலகு:2-இலாப நோக்கமற்ற அமைப்புகளின் கணக்குகள்

Prepared by: S.M. AHAMED SULAIMAN
CENTRAL HSS KAYALPATNAM,
THOOTHUKUDI Cell: 87540 78521

## கற்றல் நோக்கங்கள் :

@ இலாப நோக்கமற்ற அமைப்புகளின் இயல்புகளை புரிந்து கொள்ளுதல்
@ தனித்துவம் வாய்ந்த இனங்களின் கணக்கியல் செயல் முறைகளை புரிந்து கொள்ளுதல்
@ உபரி / பற்றாக்குறை கண்டறிதல்

## கற்றல் விளைவுகள் :

@ இலாப நோக்கமற்ற அமைப்புகளின் சேவை நோக்கத்தை அறிய முடியும்.
@ முதலின மற்றும் வருவாயின இனங்களை இனம்கான முடியும்.
@ பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் இறுதி இருப்பை அறிய முடியும்.
@ வருவாய் செலவின க/கு – உபரி / பற்றாக்குறை கண்டறிதல்

## கற்பித்தல் உபகரணங்கள் :

கதை சொல்லுதல், சுவரொட்டி தொழில்நுட்பகருவிகள், லேப்டாப், யூடியுப் போன்றவைகள்.

## கற்றல்,கற்பித்தல் செயல்பாடுகள் :

## ஆசிரியர் செயல்பாடுகள்

## பாடஅறிமுகம்:

@ சேவையை நோக்கமாக கொண்ட உள்ளூர் அமைப்புகளின் செயல்பாடுகளை விளக்கி கூறி பாடத்தை அறிமுகம் செய்தல்
@ இறுதி ரொக்க இருப்பை அறிதல் மற்றும் உபரி / பற்றாக்குறை கண்டுபிடித்தல் கணக்கு மூலம் அறிமுகம் செய்தல்
@ முதலின வருவாயின இனங்கள் கண்டறிதல்

**முன்னறிவு :**
இலாப நோக்கமற்ற அமைப்புகள் என்றால் என்ன? சேவையை நோக்கமாக கொண்ட அமைப்பு
எடுத்துக்காட்டுகள் : மருத்துவமனைகள், பள்ளி கூடங்கள்

**பாடத்தின் உள்ளடக்கங்கள் :**
@ பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு
@ வருவாய் செலவினகணக்கு

**மாணவர்கள் செயல்பாடுகள் :**
@ மாணவர்களை பாடபுத்தகங்களை படிக்க சொல்லுதல், புதிய வார்த்தைகளை அடிகோடிட சொல்லுதல், கலைச் சொற்களை படிக்க சொல்லுதல்

**வலுவூட்டல் :**
பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ?
சொத்துகணக்கு
புத்தகத்தில் உள்ள கணக்குகளுக்கு தீர்வு காணுதல்

**வரைபடம் :**
**இலாபநோக்கமற்றஅமைப்பு**
பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயாரிப்பதற்கான படிவங்கள்
வருவாய் மற்றும் செலவினகணக்குள் தயாரிப்பதற்கான படிவங்கள்

**கலைச்சொற்கள் :**
@ சந்தா @ ஆயுள் உறுப்பினர் கட்டணம்

@ நுழைவுகட்டணம் @ மதிப்பூதியம்

**மதிப்பீடு :**
**@ எளிய சிந்தனை விளாக்கள் :**
இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கு ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள்
**நடுத்தர சிந்தனை வினாக்கள் :**
முதலின மற்றும் வருவாயின இனங்களை கண்டறிதல்

**மாணவர் செயல்பாடுகள் :**
குழுவாக அமைத்து ஒரு மதிப்பெண் வினாக்களை நினைவு கூறுதல்

**தொடர்பணி :**
@ மாணவர்களை அருகில் உள்ள விளையாட்டு மைதானம் (அல்லது) பொது நல சங்கங்களுக்கு சென்று அதன் சேவை அடிப்படையிலான செயல்பாடுகளை விளக்குதல்
@ பயிற்சி கணக்குகளுக்கு தீர்வு காணுதல் ( வீட்டுபாடம் மூலம் )

வகுப்பு:12 Prepared by: S.M. AHAMED SULAIMAN

பாடம்: கணக்குப்பதிவியல் CENTRAL HSS KAYALPATNAM,

தேதி : ஜூலை இரண்டாவது வாரம் THOOTHUKUDI Cell: 87540 78521

**தலைப்பு :அலகு 2 - இலாப நோக்கமற்ற அமைப்புகளின் கணக்குகள்**

## கற்றல் நோக்கங்கள் :

@ பெறுதல்கள் மற்றும் செலுத்தங்கள் கணக்கிற்கும் வருவாய், செலவின கணக்கிற்கு இடையேயான வேறுபாடுகளை அறியச்செய்தல்

@ இலாப நோக்கமற்ற அமைப்புகளின் இருப்புநிலைகுறிப்பு தயாரித்தல்

## கற்றல் விளைவுகள் :

@ இலாப நோக்கமற்ற அமைப்புகளின் முதல் நிதியை கண்டறிதல்

@ பரிசு பொருட்கள் போன்ற குறிப்பிட்ட நிதிக்கான வரவு மற்றும் செலவுகளை குறிப்பிட்ட நிதியாக பொறுப்புகள் பகுதியில் கொண்டு வருதல்

@ இலாப நோக்கமற்ற அமைப்புகளின் நிதி அறிக்கையை அறிந்து கொள்ளுதல்

@ வருவாய் மற்றும் செலவின கணக்குகள் மற்றும் இருப்புநிலை குறிப்பு மூலமாக தீர்வு காணுதல்

@ எடுத்துக்காட்டு கணக்களுக்கு தீர்வு காணுதல்

## கற்பித்தல் உபகரணங்கள் :

@ கரும்பலகை @ வரைபடம் @ மின் அட்டைகள்

@ A V மின்னனு சாதனங்கள் @ மாணவர்கள் நடித்துகாட்டுதல்

@ அனைத்து எடுத்துக்காட்டு கணக்குகளுக்கும் கரும்பலகையில் விளக்கி தீர்வுகாணுதல்

### கலைச் சொற்கள் :

@ முதல் நிதி @ பொறுப்பகள்

@ சொத்துக்கள் @ குறிப்பிட்டநிதி

### மன வரைபடம் :

| | | |
|---|---|---|
| சந்தா | XXX | |
| கழிக்க : முந்தைய ஆண்டிற்கான சந்தா | XXX | |
| | ---------- ---------- | |
| | XXX | |
| கழிக்க : எதிர் வரும் ஆண்டிற்கான சந்தா | XX | |
| | -------------------- | |
| | XXX | |
| கூட்டுக : நடப்பாண்டு பெறவேண்டிய சந்தா | XX | |
| | -------------------- | |
| | XXX | |
| கூட்டுக : முந்தையாண்டு முன் கூட்டிப் பெற்ற நடப்பாண்டிற்கான சந்தா | XXX | |
| | -------------------- | |
| | XXX | **XXX** |

**கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் :**
**ஆசிரியர் செயல்பாடுகள்**

**முன்னறிவு :**
@ பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கை நினைவு கூறுதல்
@ முதலின மற்றும் வருவாயின இனங்களை இனம் காணுதல்

**பாடஅறிமுகம் :**
@ ஆசிரியர் மாணவர்களுக்கு முதல் நிதியை எவ்வாறுகணக்கிடவேண்டும் என்பதனை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வேறுபடுத்தி வேறுபாட்டுத் தொகையை முதல் நிதியாக கண்டறிதல்.
@ வருவாயின வரவு மற்றும செலவிற்கான அனைத்து சரிகட்டுதல்களுக்கு விளக்கம் அளித்தல்.

**மாணவர்கள் செயல்பாடுகள் :**
@ மாணவர்கள் குழுவாக அமைத்து ஒரு மதிப்பெண் வினாக்களை தீர்வு காணுதல்

**மதிப்பீடு:**
@ கணக்குகளுக்கு தீர்வுகாணுதல் ஆசிரியர் மூலம் தவறுகளை திருத்தம் செய்தல்
மதிப்பீடு :
@ எளிய சிந்தனை வினாக்களுக்கு விடையளித்தல்
@ நடுத்தர சிந்தனை வினாக்களுக்கு விடையளித்தல்
@ சிறு வினாக்கள் ஆன்லைன் மூலம் அளித்து விடை எழுத சொல்லுதல்

**தொடர்பணி :**
மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் மூலம் அனைத்து பயிற்சி கணக்குகளுக்கு தீர்வுகாணச் செய்தல்.

---

**வகுப்பு:12**
**பாடம்: கணக்குப்பதிவியல்**
**தேதி : ஜுலை மூன்றாவது வாரம்**
**தலைப்பு :அலகு 3 - கூட்டாண்மைநிறுவனக் கணக்குகள் - அடிப்படைகள்**

**Prepared by: S.M. AHAMED SULAIMAN**
**CENTRAL HSS KAYALPATNAM,**
**THOOTHUKUDI Cell: 87540 78521**

## கற்றல் நோக்கங்கள் :
@ கூட்டாண்மையின் பொருள் மற்றும் சிறப்பியல்புகள் அறிந்து கொள்ளுதல்
@ கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் வகைகளை அறிந்து கொள்ளுதல்
@ கூட்டாண்மையின் ஒப்பாவணம் அறிந்துகொள்ளுதல்

## கற்றல் விளைவுகள் :
@ கூட்டாண்மையின் பொருள், வரைவிலக்கணம் மற்றும் சிறப்பியல்புகள் பற்றி அறியலாம்
@ கூட்டாண்மையின் ஒப்பாவணம் மற்றும் ஒப்பாவணம் இல்லாத போது 1932 இந்திய கூட்டாண்மைசட்டம் விதிமுறை பயன்பாடு அறிதல்
@ கூட்டண்மை நிறுவனத்தின் இறுதிகணக்குகளை அறிந்து கொள்ளுதல்
@ முதல் கணக்கு தயாரிக்கும் முறைகளை அறிதல்.

**கற்பித்தல் உபகரணங்கள் :**
கரும்பலகை – வரைபடம் – A Vகருவிகள் ICTகருவிகள்.

**முன்னறிவு :**
அன்றாட வாழ்வில் நம் ஊரில் செயல்படும் கூட்டாண்மை நிறுவனங்களையும் அதன் செயல்பாடுகளையும் எடுத்து கூறி மாணவர்களுக்கு உதாரணம் கூறுதல்.

**பாடஅறிமுகம் :**
@ கூட்டாண்மை என்றால் என்ன என்பதையும் அதன் சிறப்பில்புகள் என்ன என்பதையும் அனுபத்தின் வாயிலாக அறிமுகம் செய்து வைத்தல்.
@ கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் அதன் உள்ளடக்கத்தை எடுத்து கூறுதல்
@ நிலைமுதல் மற்றும் மாறுபடும் கணக்குகளுக்கு தீர்வு காணுதல்.

**கற்றல்,கற்பித்தல் செயல்பாடுகள் :**
**ஆசிரியர் செயல்பாடுகள்**
@ கூட்டண்மை நிறுவனத்தின் செயல்பாடுகளை செய்தித்தாள்கள் மற்றும் AV தொழில் நுட்ப சாதனத்தை இயக்கி காட்டி புரியவைத்தல்

**மாணவர் செயல்பாடுகள் :**
@ மாணவர்களை சிறுகுழுவாக உருவாக்கி கூட்டாண்மை நிறுவனத்தை தோற்றுவித்து செய்யும் தொழில் பற்றி நடித்து காட்டி விளக்கமளித்தல்.
**மன வரைபடம் :**
கூட்டாண்மை
அறிமுகம்
பொருள் மற்றும் வரைவிலக்கணம்
சிறப்பியல்புகள்
கூட்டாண்மை ஒப்பாவணம், உள்ளடக்கம்

**கலைச் சொற்கள் :**
@ கூட்டாளி @ கூட்டாண்மை நிறுவனம்
@ கூட்டாண்மை ஒப்பாவணம் @ நிலைமுதல்

**மதிப்பீடு:**
மேற்கண்ட பாடங்களில் மாணவரின் அறிவுத்திறனை மதிப்பீடு செய்தல்
@ கூட்டாண்மை என்றால் என்ன?
@ கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
@ முதலின் வகைகளை அறிந்து கொள்ளுதல்

**தொடர்பணி:**
மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் மூலம் தொடர்பணி அளித்தல்
@ கூட்டாண்மையின் சிறப்பியல்புகள்யாவை ?
@ நிலை முதலுக்கும் மாறுபடும் முதலுக்கும் உள்ள வேறுபாடு யாவை ?
@ புத்தகத்தில் உள்ள கணக்குகளுக்கு தீர்வு காண செய்தல்.

தேதி : ஜூலை நான்காவது வாரம் THOOTHUKUDI Cell: 87540 78521
தலைப்பு :அலகு 3 - கூட்டாண்மைநிறுவனக் கணக்குகள் - அடிப்படைகள்

## கற்றல் நோக்கங்கள் :

@ முதல் மீதுவட்டி, எடுப்புமீதானவட்டி, கூட்டாளிகளின் ஊதியம், மற்றும் கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி போன்றவை கணக்கிடுதல் பற்றி புரிந்து கொள்ளுதல்.
@ கூட்டாளிகளுக்கிடையே உள்ள இலாப பகிர்வு பற்றி புரிந்து கொள்ளுதல்.

## கற்றல் விளைவுகள் :

@ முதல் மீது வட்டி மற்றும் எடுப்பு மீதான வட்டி கணக்கிடுதலில் பல வுகையான படிநிலையை அறிந்து கொள்ளுதல்.
@ எடுப்பு மீதான வட்டி நேரடி முறை மற்றும் பெருக்குத் தொகை முறையில் தீர்வு காணுதல் அறிதல்.
@ இலாபநட்ட பகிர்வு கணக்கு மாதிரி படிவம் நினைவில் வைக்க உதவுதல்.

## கற்பித்தல் உபகரணங்கள் :

@ மொபைல் ஆப் @ யூ டியுப் சேனல்
@ புரோஜக்டர் @ வரைபடம்

**முன்னறிவு :**
மாணவர்களுக்கு மாறுபடும் முதல் அடிப்படையிலும், நிலைமுதல் அடிப்படையிலும் கணக்கினை எவ்வாறு எழுதுகிறார்கள் என்பதனை முன்னறிவு செய்தல்.

**பாட அறிமுகம் :**
@ முதல் மீது வட்டி எவ்வாறு எந்தெந்த படிநிலைகளில் கணக்கிடப்படுகிறது என்பதனை அறிமுகம் செய்தல்.
@ எடுப்பு மீதான வட்டி கணக்கிடும் முறைகளை எடுத்து கூறி கணக்குகளுக்கு தீர்வு காணுதல்.
@ நிலைமுதல் மற்றும் மாறுபடும் கணக்குகளுக்கு தீர்வு காணுதல்.

**முன்னறிவு :**
மாணவர்களுக்கு முதல் மீது வட்டி மற்றும் எடுப்பு மீதான வட்டி எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும் என்பதை அறிவித்தல்.

**பாடஅறிமுகம் :**
@ முதல் மீது வட்டி கணக்கிடுதல் மற்றும் கணக்கிடும் முறைகள் மற்றும் கணக்குகளுக்கு தீர்வு காணுதல்.
@ எடுப்பு மீதான வட்டி கணக்கிடுதல் மற்றும் கணக்கிடும் முறைகளை மாணவர்களுக்கு எடுத்து கூறி தீர்வு காணுதல்.
@ நிலைமுதல் மற்றும் மாறுபடும் கணக்குகளுக்கு தீர்வு காணுதல

## கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் :
## ஆசிரியர் செயல்பாடுகள்:

@ மாணவர்களுக்கு முதல் மீதான வட்டி எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதனை கரும்பலகையில் செய்து பாட்டுதல்.
@ எடுப்பு மீதான வட்டியின் பல்வேறு படிநிலைகளை எடுத்துக் கூறி தீர்வு காணுதல்.

**மாணவர் செயல்பாடுகள் :**
@ மாணவர்களை குழுவாக அமைத்து முதல் மீது வட்டி மற்றும் எடுப்பு மீதான வட்டி போன்ற கணக்குகளுக்கு தீர்வு காண நடித்தல் முறையில் கற்றல்.

**மனவரைபடம் :**
எடுப்பு மீதான வட்டி %

| காலம் | | தொடக்கம் | நடுவில் | இறுதியில் |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு மாதமும் | X12 | $\frac{13}{24}$ | $\frac{12}{24}$ | $\frac{11}{24}$ |
| ஒவ்வொரு காலாண்டும் | X 4 | $\frac{15}{24}$ | $\frac{12}{24}$ | $\frac{09}{24}$ |
| ஒவ்வொரு அரையாண்டும் | X 2 | $\frac{18}{24}$ | $\frac{12}{24}$ | $\frac{06}{24}$ |

**கலைச் சொற்கள் :**
@ முதல் மீது வட்டி @ எடுப்பு மீதான வட்டி
@ இலாப நட்ட பகிர்வு க/கு @ கூட்டாளிகளின் கடன் க/கு

**மதிப்பீடு:**
@ முதல் மீதான வட்டி கணக்கிடும் முறைகளை விளக்கி கூறி எடுத்துக்காட்டு கணக்குகளுக்கு தீர்வு காணுதல்
@ எடுப்பு மீதான வட்டி கணக்கிடும் முறைகளை விளக்கி கூறி எடுத்துக்காட்டு கணக்குகளுக்கு தீர்வு காணுதல்
@ இலாப - நட்டபகிர்வுகணக்கு ஏன் தயாரிக்கப்படவேண்டும்.

**தொடர்பணி:**
@ கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேடு பதிவு என்ன?
@ முதல் மீது வட்டி, எடுப்பு மீதான வட்டி, கடன் மீதான வட்டி மற்றும் கழிவுக்கான பயிற்சி கணக்குகளை வீட்டு பாடம் மூலம். தீர்வுகாண செய்தல்.

வகுப்பு:12 Prepared by: S. KALAISELVI
பாடம்: **கணக்குப்பதிவியல்** Koodakovil Nadars hr sec school
தேதி : ஆகஸ்ட் முதல் வாரம் Madurai (Dist) Cell: 9092468148

தலைப்பு : அலகு 4 கூட்டாண்மை கணக்குகள்- நற்பெயர்

<u>கற்றல் நோக்கம்:</u>

கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயர் மதிப்பிடுவதன் தேவை மற்றும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளைப் புரிந்து கொள்ளுதல்.

<u>கற்றல் விளைவுகள்:</u>

தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய அத்தொழிலுக்கு புகழ் என்பதை புரிந்து கொண்டனர்.
நிறுவனத்தின் இலாபத்தன்மையைப் பொறுத்து திட்டவட்டமான மதிப்பை பொறுத்து நற்பெயரின் தன்மை தெரிந்து கொள்ள முடியும் என்பதை அறிந்து கொண்டனர்.
கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயருக்கு பங்களிக்கும் காரணிகளை விவாதிப்பதன் வாயிலாக நற்பெயரை புரிந்து கொண்டனர்.

<u>கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:</u>

PPT, charts, QRcode.

<u>முன்னறிவு:</u>

கண்ணுக்கு புலனாகா நிலைச்சொத்துகள் பற்றியும் அவற்றின் பொதுமக்களிடையே புகழ் மற்றும் நன்மதிப்பினை ஏற்படுத்தும் நிறுவனங்கள் பற்றியும் எடுத்துக் கூறுதல்.

<u>பாடஅறிமுகம்</u>:

ஒரு நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் அதன் நற்பெயரை பொறுத்து தான் அமையும் என்று சொல்லி அறிமுகம் செய்வது
பண மதிப்பை பொறுத்து தான் நறபெயர் அமையும் என்பதை குறிக்கும்.

<u>கற்றல் கற்பித்தல் செயல்பாடு:</u>

மாணவர்களுக்கு கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் பற்றி எடுத்து காட்டுதல்.

<u>ஆசிரியர் செயல்பாடு</u>:

மாணவர்களுக்கு நற்பெயரை மதிப்பை நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் மூலம் சாதகமான அமைவிடத்தில் நல்ல தரமான சேவையை வழங்கி, காலஅளவு, திரமையான மேலாண்மை போட்டி அளவு பிறகாரணிகள் பற்றி விளக்கம் தருதல்.

<u>மாணவர் செயல்பாடு:</u>

பல்வேறு நிறுவனங்களின் அடையாள சின்னங்களை சேகரித்து நிறுவனத்தின் பெயரை அடையாளம் காணச் செய்யவும்.

வலுவூட்டல்:-

நற்பெயர் தொடர்புடைய நிறுவனங்களை வீடியோ மூலம் காண்பித்து விளக்கி கூறுதல்.

**மதிப்பீடு :**

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

- நற்பெயர்..........சொத்து

நடுத்தர சிந்தனை வினா(MOT):

- ஒரு தொழிலின் புகழ் அதாவது நன்மதிப்பு..............

உயர்சிந்தனை வினாக்கள்(HOT):

- கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினை தீர்மானிக்கு காரணிகள் யாவை?

குறைதீர் கற்றல்:

மெல்ல கற்கும் மாணவச் செல்வங்களுக்கு ஒரு வரிவினாக்களை சொல்லி தந்து விளக்குதல்.

செயல்பாடு:

கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் பற்றிய காரணிகளை விவாதித்து வகுப்பில் உள்ள அனைவருக்கும் தெரியப்படுத்துதல்.

தொடர்பணி:

புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களை பற்றி அதன் நற்பெயர் பற்றியும் செய்தித்தாள் மூலம் விவரங்களை சேகரித்தல்.

---

**வகுப்பு:12** **Prepared by: S.KALAISELVI**

பாடம்: **கணக்குப்பதிவியல்** **Koodakovil Nadars hr sec school**

**தேதி** : ஆகஸ்ட் இரண்டாம் வாரம் **Madurai (Dist) Cell: 9092468148**

தலைப்பு : அலகு 4 கூட்டாண்மை கணக்குகள்-நற்பெயர்

கற்றல் நோக்கம்:

- ❖ நற்பெயர் மதிப்பீடு முறைகளைப் புரிந்து கொள்ளுதல்
- ❖ நற்பெயர் வகைகளை பற்றி அறிந்து கொள்ளுதல்

கற்றல் விளைவுகள்:

கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயர் மதிப்பிடுவதன் தேவை பற்றி புரிந்து கொண்டனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

QR Codes, Website Projector.

முன்னறிவு:

கண்ணுக்கு புலனாகச் சொத்து தான் நற்பெயர் என்பதை பற்றி தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?

பாடஅறிமுகம்:

கூட்டாளிகளின் உரிமைகளை காக்கும் பொருட்டு நற்பெயரை மதிப்பிடு செய்ய முடியும் என கூறி அது எவ்வாறு என அறிமுகம் செய்தல்

- நற்பெயர் வகைகள் பற்றி தெரிந்து கொள்ள செய்தல்
- நற்பெயர் மதிப்பிடும் முறைகள் பற்றி அறிந்து கொள்ள செய்தல்

<u>கற்றல் கற்பித்தல் செயல்பாடு:</u>

ரொக்க அல்லது பொருளைச் செலுத்திபெற்றிருந்தால் அது வாங்கப்பட்ட நற்பெயர் என்றும் நிறுவனம் தானே உருவாக்கிக்கொள்ளும் நற்பெயரே தன்னுருவாக்க நற்பெயர் என்றும் கூறுதல்

<u>ஆசிரியர் செயல்பாடு:</u>

நற்பெயர் மதிப்பிடும் முறையை சராசரி இலாப, உயர் இலாப, மூலதனமாக்கல் என பிரிவுளை கூறி விளக்கம் தருதல்.

- ❖ நற்பெயர் மதிப்பீடு முறைகளைப் புரிந்து கொள்ளுதல்
- ❖ நற்பெயர் வகைகளை பற்றி அறிந்து கொள்ளுதல்

கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயர் மதிப்பிடுவதன் தேவை பற்றி புரிந்து கொண்டனர்


நற்பெயர் மதிப்பிடும் முறைகள் பற்றி அறிந்து கொள்ள செய்தல்.

<u>மாணவர் செயல்பாடு</u>

ரொக்க அல்லது பொருளைச் செலுத்தி பெற்றிருந்தால் அது வாங்கப்பட்ட நற்பெயர்

என்றும் நிறுவனம் தானே உருவாக்கிக்கொள்ளும் நற்பெயரே தன்னுருவாக்க நற்பெயர் என்றும் கூறுதல்

நற்பெயர் மதிப்பிடும் முறையை சராசரி இலாப, உயர் இலாப, மூலதனமாக்கல் என பிரிவுளை கூறி விளக்கம் தருதல்.




தொடர்ச்சியான இடைவெளிகளில் தொடர்ந்து சீராக பெறப்படும் ரொக்க ஓட்டத்தை ஆண்டுத் தொகை எனலாம்.

<u>வலுவூட்டல்:-</u>

மாணவர்களை ஒவ்வொரு முறை சொல்லி விளக்கம் தரும் போது அதற்குரிய சூத்திரங்களை கட்டம் இடும்படி செய்தல்.

நற்பெயருக்கான சூத்திரங்களை வரிசைப்படுத்தி

உயர் இலாபம்=சராசரி இலாபம்-சாதாரண இலாபம் என்பதை விளக்கிக் கூறுதல்.

**மதிப்பீடு**:

எளிய சிந்தனை வினாக்கள் (LOT):

- ஒரு புலனாகக் நிலைச்சொத்து..........

நடுத்தர சிந்தனை வினா (MOT):

- சராசரி இலாபம்-சாதாரண இலாபம்=...............

உயர் சிந்தனை வினாக்கள் (HOT):

- நற்பெயர் மதிப்பிடும் முறைகளை விளக்குக.

குறைதீர் கற்றல்:

சூத்திரங்களை புரிவதில் சிரமம் உள்ள மாணவச் செல்வங்களுக்கு பின்வரும் விளக்கம் தரப்படும். பாடப்புத்தகத்தில் சூத்திரங்களை அடிக்கோடிட்டு எழுதி விளக்கம் தருதல்.

செயல்பாடு:

மாணவர்களுக்கிடையே ஒவ்வொரு நற்பெயர் மதிப்பிடும் முறையை கூறி கலந்து உரையாடச் சொல்லுவது.

தொடர்பணி:

செய்திதாள்களில் வரும் புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களின் நற்பெயரை சேகரித்து தொகுப்பு தயார் செய்தல்.

---

**வகுப்பு:12**

**பாடம்: கணக்குப்பதிவியல்**

தேதி : ஆகஸ்ட் மூன்றாம் வாரம்

தலைப்பு : அலகு 5 கூட்டாளி சேர்ப்பு

**Prepared by: S.KALAISELVI**
**Koodakovil Nadars hr sec school**
**Madurai (Dist) Cell: 9092468148**

கற்றல் நோக்கம்:

- கூட்டாளயை சேர்க்கும் போது செய்ய வேண்டிய சரிக்கட்டுதல்கள் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- பகிர்ந்துதரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- புதிய இலாப பகிர்வு விகிதம், தியாக விகிதம் பற்றி அறிந்து கொள்ளுதல்.

கற்றல் விளைவுகள்:

- கூட்டாண்மை நிறுவனத்தில் ஒரு நபரை புதிய கூட்டாளியாக சேர்ப்பதே கூட்டாளி சேர்ப்பு என்று விளக்கப்பட்டது.
- கூட்டாளியைச் சேர்க்கும் போது கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகளில் மாற்றம் ஏற்படுவது பற்றி விளக்கப்பட்டது.
- கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் இருக்கும் இலாப நட்டங்கள் பகிர்ந்து தரா இலாபம் என விளக்கப்பட்டது.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

வரைப்படம், படவீழ்த்தி, PPT

முன்னறிவு:

புதிய கூட்டாளி அவர் கூட்டாளியாக சேர்க்கப்பட்ட நாளிலிருந்து கூட்டாண்மையில் ஏற்படும் இலாப நட்டத்தில் பஙகேற்க அனைத்து உரிமை உண்டு என்பதை அறிதல்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

நான் தொழில்லா நிலையை கண்டு என் நண்பர் அவர் நிறுவனத்தில் அனைத்து கூட்டாளிகளின் இசைவுடன் என்னை புதிய கூட்டாளியாக சேர்த்தான். அதுவே அந்த அமைப்பே கூட்டாண்மை சேர்ப்பு மாணவர்களே!

ஆசிரியர் செயல்பாடு:

- புதிய கூட்டாளியை சேர்க்கும் போது செய்ய வேண்டிய சரிக்கட்டுதல்களை பற்றி எடுத்து கூறுதல்.
- முதலீடுகளின் சந்தை மதிப்பில் ஏற்படும் இறக்கத்தை சரிக்கட்டுவதற்காக முதலீட்டு மாறுபடும் நிதி இலாபத்திலிருந்து உருவாக்கப்படும் என்பதை எளிமையாக விளக்குதல்

மாணவர் செயல்பாடு:

கூட்டாளி சேர்ப்பின் சரிக்கட்டுதல்களை சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீட்டில் நிறுவனத்தின் உண்மை மற்றும் நேர்மையான நிதிநிலையை அறிவது மற்றும் கிடைக்க பெற்ற இலாபத்தினை பழைய கூட்டாளிகளுக்கு தருவது பற்றி மாணவர்களை எழுப்பி விளக்கம் தருதல்.

வலுவூட்டல்:-

மாணவன் ஒருவனை எழுப்பி நடவடிக்கையை கரும்பலகையில் எழுத செய்து அந்நடவடிக்கையின் விளைவு மூலம் இரு வண்ண சுண்ணகட்டி மூலம் தேய்மானம் மறுமதிப்பீடு குறைவு என்று சொன்னால் ஒரு வண்ணத்திலும், மறுமதிப்பீடு அதிகரிப்பு என்று சொன்னால் மற்றொரு வண்ணத்திலும் எழுத செய்தல்.

**மதிப்பீடு** :

தியாகப்பங்கு=பழைபங்கு-புதியபங்கு

தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிக்கு ஒரு இலாபத்தினை தருவது ஆகும்.

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

- மறுமதிப்பீட்டு கணக்கு ஒரு............

நடுத்தர சிந்தனை வினா(MOT):

- மறுமதிப்பீட்டு கணக்கு.......... என்று அழைக்கப்படும்

உயர்சிந்தனை வினாக்கள்(HOT):

- சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்யும் குறிப்பேட்டுப் பதிவு தருக

குறைதீர் கற்றல்:

மெல்ல கற்கும் மாணவச் செல்வங்களுக்கு தகவல்களை செயல்பாட்டின் மூலம் விளக்கம் தந்து சொல்ல வைத்தல்.

செயல்பாடு:

கலர் சுண்ணக்கட்டி மூலம் வேறுபடுத்தி காட்டியவாறு நடவடிக்கைகளை கூற செய்தல்.

தொடர் பணி:

கூட்டாளிகள் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து நிறுவனம் மேற்கொள்ளும் செயல்களை மாணவர்களை தொகுத்து A4 sheet-ல் எழுத செய்தல்.

---

Prepared by: S.KALAISELVI
Koodakovil Nadars hr sec school
Madurai (Dist) Cell: 9092468148

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : ஆகஸ்ட் நான்காவது வாரம்

தலைப்பு : அலகு 5 கூட்டாளி சேர்ப்பு

கற்றல் நோக்கம்:

- நற்பெயர் குறித்த சரிக்கட்டடல்கள் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

புதிய இலாபப் பகிர்வு விகித அடிப்படையில் முதலினைச் சரிக்கட்டுதல் பற்றி தெரிந்து கொள்ளுதல்

கற்றல் விளைவுகள்:

- நற்பெயர் குறித்த சரிக்கட்டுதல் மூலம் நற்பெயர் மதிப்பிடப்படுகிறது, பற்றி எளிமையாக விளக்கப்பட்டது.
- நற்பெயருக்கான கணக்கியல் செயல் முறைகள் பற்றி எளிமையாக விளக்கப்பட்டது.
- புதிய இலாபப் பகிர்வு விகித அடிப்படையில் முதலினைச் சரிக்கட்டுதல் பற்றி எளிமையாக விளக்கப்பட்டது.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

வரைப்படம், படவீழ்த்தி, PPT

முன்னறிவு:

கூட்டாண்மை நிறுவனத்தில் ஒரு நபரை புதிய கூட்டாளியாக சேர்ப்பது கூட்டாளிசேர்ப்பு என்பதையும் புதிய கூட்டாளி நிறுவனத்திற்கு முதல் கொண்டுவரவேண்டும். இலாப நட்டங்களில் உரிமை இருக்கும் என்பதை தெரிந்து கொளவோம்.

பாடஅறிமுகம்:

புதிய கூட்டாளி கூட்டாண்மையில் கொண்டு வரும் தொகையில் அடிப்படையில் கணக்கிடப்படும் முதலினை சரிக்கட்டுதல் புதிய இலாபப்பகிர்வு விகிதம் மூலம் சரிக்கட்டலாம் அதுவே சரிக்கட்டல் ஆகும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

பழைய கூட்டாளிகளுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கும் போது புதிய கூட்டாளி நற்பெயர் கூட்டாண்மை நிறுவன ஏடுகளில் பதிவுகள் ஏதும் செய்யப்படுவது இல்லை என்பது பற்றி எடுத்து கூறுதல்

ஆசிரியர் செயல்பாடு:

ஒரு நிறுவனம் ஈட்டியுள்ள நன்மதிப்பு தற்போதைய இலாபம் மற்றும் எதிர்கால இலாபம் ஆகியவற்றில் விளைவை ஏற்படுத்தும் என்பதை பற்றி எளிமையாக விளக்குதல்.

மாணவர் செயல்பாடு:

நற்பெயருக்கான கணக்கியல் செயல் முறைகள் கூட்டாளி சேர்க்கையின் போது எவை என்பதை விவாதித்தல்.

வலுவூட்டல்:-

இரண்டு மாணவர்களை எழுப்பி கூட்டாண்மை நிறுவனத்தில் கூட்டாளியாக நினைக்க வைத்து மற்றொரு மாணவர்களை புதிதாக சேர்த்து கூட்டாளி சேர்ப்பின் மூலம் கொண்டு வரும் சொத்துகளை பதிவு செய்து ஒரு தொகுப்பு தயார் செய்தல்.

புதிய இலாபப்பகிர்வு விகிதத்தைத் கூட்டாளிகள் ஒப்புக் கொள்ளவில்லை எனில் கூட்டாளிகள் இலாப நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்வர் என்பதை தெளிவுப்படுத்துதல்.

**மதிப்பீடு :**

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

தியாக விகிதம் என்றால் என்ன?

நடுத்தர சிந்தனை வினா(MOT):

மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது......

உயர்சிந்தனை வினாக்கள்(HOT):

நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறை குறிப்பு தரவும்.

குறைதீர் கற்றல்:

மெல்ல கற்கும் மாணவச் செல்வங்களுக்கு ஒருவரி வினாக்களை எழுதி வரச் செய்தல்.

தொடர்பணி:

நற்பெயர் குறித்த சரிக்கட்டுதல்கள் மறுமதிப்பீடு குறிப்பேடுகளை தொகுத்து ஒப்படைப்பாக செயல் சொல்லுதல் குறிப்பேடு பதிவுகளை நோட்டில் எழுத சொல்லுதல்.

பல்வேறு நிறுவனங்களில் கூட்டாளிகள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை தொகுத்து ஒப்படைப்பாக செய்து வரச் செய்தல்.

---

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : **செப்டம்பர் 1ம் வாரம்**

தலைப்பு : அலகு 6 **கூட்டாளி விலகல் மற்றும் இறப்பு**

Prepared by: DR M.BALASHUNMUGANANTHAM
SOURASHTRA (B) HSS MADURAI
Cell: 6380848 005

**கற்றல் நோக்கங்கள்** ;

கூட்டாளி விலகலின் போது செய்ய வேண்டிய கணக்கியல் நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு புரிய வைத்தல் .

கூட்டாளி விலகுதல் போது தயாரிக்க வேண்டிய கூட்டண்மை கணக்குகள் தயார் செய்தல்.

**கற்றல் விளைவுகள்** ;

கூட்டான்மையிலிருந்து ஒரு கூட்டாளி விலகும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பு, ஏட்டுமதிப்பிலிருந்து மாறுபடும் என்று மாணவர்கள் புரிந்து கொள்கிறார்கள்,

இதனால் தான் மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கப்படுகின்றன என மாணவர்கள் புரிந்து கொள்கின்றனர். மறுமதிப்பீட்டு கணக்குகளில் சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போதும் பொறுப்புகள் மதிப்பு குறையும் போதும் வரவு செய்யப்படும் என்றும் சொத்துக்களின் மதிப்பு குறையும் போதும் மற்றும் பொறுப்புகளை மதிப்பு அதிகரிக்கும் போதும் மறுமதிப்பீட்டுக் கணக்குகளில் வரவு செய்யப்படும் என்று மாணவர்கள் தெளிவாக புரிந்து கொள்கின்றனர்.

கூட்டாளி விலகும் போது அவருக்கு சேர வேண்டிய முழுதொகையும் ரொக்கமாக உடனடியாக செலுத்தலாம் அல்லது மொத்த தொகையும் கூட்டாளி கடன்கணக்கிற்கு மாற்றிவிடலாம் அல்லது அவர்கள் தொகையை பாதியை ரொக்கமாகவும் மீதிதொகையை கடன் கணக்கிற்கு மாற்றிக் கொள்ளலாம் என்பதை மாணவர்கள் புரிந்து கொண்டனர்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்::** வரைபடம், PPT, QR code

**முன்னறிவு:**

கூட்டாண்மை நிறுவனத்தின் பொருள் மற்றும் இயல்புகளையும் ,

கூட்டாண்மை ஒப்பாவணம் என்பதையும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் ,நற்பெயர்களை மதிப்பீடு செய்தலையும் மாணவர்களுக்கு முன் நிறுத்துதல்.

**ஆர்வமூட்டல்**

வகுப்பறையில் உள்ள மாணவர்களை கூட்டாளியாக நடிக்க சொல்லி அவர்களை ஒருவரை கூட்டாண்மையில் இருந்து விலகச் செய்து அவர்களுக்கு தர வேண்டிய இலாபம் அல்லது நட்டத்தை எவ்வாறு பிரித்து அளிப்பது என்பதை ஆர்வமூட்டல்.

**பாடஅறிமுகம்**

ஒரு கூட்டாளி விலகலின் போது அவர்களுக்கு செய்ய வேண்டிய சரிகட்டுதல்கள் என்ன என்பதையும் கூட்டாளி விலகும் போது அவருக்கு பகிர்ந்துதராத இலாபங்கள் ,காப்புகள் மற்றும் நட்டங்களை எவ்வாறு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்பதையும். சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு எவ்வாறு செய்தல் என்பதையும்

புதிய லாபபகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம் எவ்வாறு கணக்கிட வேண்டும்.

நற்பெயரை எவ்வாறு சரிகட்ட .

கூட்டாளி விலகும் நாள் வரை உள்ள நடப்பாண்டு இலாபத்தை எவ்வாறு சரிகட்டுதல், விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல்

**ஆசிரியர்செயல்பாடு:** **மறுமதிப்பீடு க|கு**

| **பற்று** | **ரூ.** | **வரவு** | **ரூ.** |
|---|---|---|---|
| சொத்துகள் மதிப்பு குறைவு | XXX | சொத்துகள் மதிப்பு அதிகரிப்பு | XXX |
| பொறுப்புகள் மதிப்பு அதிகரிப்பு | XXX | பொறுப்புகள் மதிப்பு குறைவு | XXX |
| ஐயக்கடன் அதிகரிப்பு | XXX | ஐயக்கடன் குறைவு | XXX |
| கொடுபடா செலவு | XXX | கடனீந்தார் போக்கு | XXX |
| **மறுமதிப்பீடு இலாபம்**<br>**கூட்டாளிகளின் முதல் க/கு** | **XXX** | **மறுமதிப்பீடு நட்டம்**<br>**கூட்டாளிகளின் முதல் க/கு** | **XXX** |
| | **XXX** | | **XXX** |

**மாணவர் செயல்பாடு**

மாணவர்களை பாடபுத்தகங்களை படிக்க சொல்லி புதிய சொற்களை அடிக் கோடிட்டு படிக்க சொல்லுதல். மாணவரிடம் நாடகம் போன்று நடிக்க வைத்து அவர்களில் ஏதேனும் ஒருவரை கூட்டாண்மையிலிருந்து விலக வைத்து அதன் மூலம் அவர்களுக்கு கூட்டாளி விலகுதல் என்பதை புரிய வைத்தல்

**வலுவூட்டல்**

ஒரு கூட்டாளி விலகும் போது , பழைய கூட்டாண்மை முடிவுக்கு வருகிறது . நிறுவனம் மறு வடிவமைப்பு செய்யப்படுகிறது மற்ற கூட்டாளிகள் புதிய ஒப்பந்தத்துடன் கூட்டாண்மையில் தொடர்கிறார்கள் .

விலகும் கூட்டாளி, விலகும் நாள் வரை கூட்டாண்மை நிறுவனத்தின் செயல்களுக்கு பொறுப்பு

**மதிப்பீடு**

**எளிய வினா**

மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது

விடை: நட்டம்

**நடுத்தரவினா**

சொத்து மற்றும் பொறுப்புகளின் மதிப்புகளில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் குறைவு பதிவு செய்ய எந்த கணக்கு தயாரிக்கப்படுகிறது ?

விடை: மறுமதிப்பீட்டுகணக்கு

**உயர்தர சிந்தனை வினா**

எந்த கணக்கு ஒரு தற்காலிக கணக்காகும் .

விடை: இலாபநட்ட அனாமத்து கணக்கு

**குறைதீர் கற்றல்**

மெல்ல கற்கும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு மிகச்சிறிய வினாக்களை சொல்லிக் கொடுத்தல்

**தொடர்பணி**

பயிற்சி கணக்குகளை கற்பித்தல்

---

**வகுப்பு:12**

**பாடம் : கணக்குப்பதிவியல்**

தேதி : **செப்டம்பர் 2 ம் வாரம்**

தலைப்பு : அலகு 6 **கூட்டாளி விலகல் மற்றும் இறப்பு**

Prepared by: DR M.BALASHUNMUGANANTHAM
SOURASHTRA (B) HSS MADURAI
Cell: 6380848 005

**கற்றல்நோக்கங்கள்** :

கூட்டாளி இறப்பின் போதும் செய்ய வேண்டிய கணக்கியல் நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு புரிய வைத்தல் .

கூட்டாளி இறப்பின் போது தயாரிக்க வேண்டிய கூட்டண்மை கணக்குகள் தயார் செய்தல்.

**கற்றல் விளைவுகள்** :

மாணவர்கள் கூட்டாளி விலகலின் போது நிறுவனம் கூட்டாளியிடம் செலுத்த வேண்டிய தொகையை அவரிடமே வழங்கப்படும். ஆனால் கூட்டாளி இறப்பின் போது அவருக்கு சேர வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் அல்லது சட்டமுறை பிரதிநிதியிடம் வழங்கப்படும் என்பதையும் மாணவர்கள் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**: வரைபடம்,PPT, QR code

**முன்னறிவு**:

கூட்டாண்மை நிறுவனத்தின் பொருள் மற்றும் இயல்புகளையும் ,

கூட்டாண்மை ஒப்பாவணம் என்பதையும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும், நற்பெயர்களை மதிப்பீடு செய்தலையும் மாணவர்களுக்கு நினைவூட்டுதல்

**பாட அறிமுகம்**

கூட்டாளி இறப்பின் போது செய்ய வேண்டிய சரிகட்டுகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல்

**ஆசிரியர் செயல்பாடு**

**பாடவளர்ச்சி**

இறந்த கூட்டாளிகளின் தொகையை செலுத்துவதற்கு கீழ்க்கண்ட குறிப்பிட்டுபதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இறந்த கூட்டாளியின் நிறைவேற்றளர் அதாவது வாரிசுக்கு செலுத்துதல்

**ரொக்கம் உடனடியாக செலுத்தியது**

| நாள் | விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|
| | நிறைவேற்றாளர் க / கு ப.<br>வங்கிக / கு | XXX | <br>XXX |

**ரொக்கம் உடனடியாக செலுத்தாத போது**

| நாள் | விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|
| | நிறைவேற்றாளர் க / கு ப.<br>நிறைவேற்றாளர் கடன் க / கு | XXX | <br>XXX |

**பகுதி ரொக்கமாக செலுத்தப்பட்டது**

| நாள் | விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|
| | நிறைவேற்றாளர் க / கு ப.<br>வங்கிக / கு<br>நிறைவேற்றாளர் கடன் க / கு | XXX | <br>XXX<br>XXX |

**மாணவர் செயல்பாடு**

மாணவர்களை பாடபுத்தகங்களை படிக்க சொல்லி புதிய சொற்களை அடிக்கோடிட்டு படிக்க சொல்லுதல்.

மாணவரிடம் நாடகம் போன்று நடிக்க வைத்து அவர்களில் ஏதேனும் ஒருவரை கூட்டாண்மையிலிருந்து விலக வைத்து அதன்மூலம் அவர்களுக்கு கூட்டாளி விலகுதல் என்பதை புரிய வைத்தல்

**வலுவூட்டல்**

ஒரு கூட்டாளியின் இறப்பின் போது கூட்டாண்மை கலைக்கப்படலாம் அல்லது மறு வடிவமைக்கப்படலாம்

**மதிப்பீடு**

**எளிய வினா**

ஒரு கூட்டாளி இறப்பின் போது அவருக்கு சேர வேண்டிய தொகை யாரிடம் வழங்கப்படும் ?

விடை: நிறைவேற்றாளரிடம்

**நடுத்தர வினா**

ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த ஒருவர் இறந்து விடுகிறார் ,அவருக்கு செலுத்த வேண்டிய இறுதி தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை அது மாற்றப்பட வேண்டிய கணக்கு

விடை: நிறைவேற்றாளர் கடன் கணக்கு

**உயர்தர சிந்தனை வினா**

கூட்டாளி இறக்கும் போது ,இறந்த நாள் வரைக்கும் நிறுவனத்தின் லாபத்தை அவரின் பங்குக்கு மாற்றப்படுவது

விடை: இலாப நட்ட கணக்கில் பற்று வைத்தல்

**குறைதீர் கற்றல்**

மெல்ல கற்கும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு மிகச்சிறிய வினாக்களை சொல்லிக் கொடுத்தல்

**தொடர்பணி**

பயிற்சி கணக்குகளை கற்பித்தல்

---

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : **அக்டோபர் முதல் வாரம்**

தலைப்பு : அலகு 7 **நிறுமக் கணக்குகள்**

**(7.1 அறிமுகம் முதல் 7.8.3 அழைப்பு முன்பணம் வரை)**

**Prepared by: S. Anbu**
**CSM MPL HSS Pillaiyarpalayam,**
**Kancheepuram (Dist) Cell: 97868 51452**

**<u>கற்றல் நோக்கங்கள்</u>** :

மாணவர்கள்

- நிறுமத்தின் பொருள், வரையறு மற்றும் பண்புகள்
- பங்குகளின் பொருள், வகைகள் மற்றும் பங்கு முதலின் பிரிவுகள்
- நேர்மைப் பங்குகள் வெளியிடுவதற்கான செயல்முறை
- குறை ஒப்பம், மிகை ஒப்பம் மற்றும் அழைப்பு முன்பணம் ஆகியவற்றை புரிந்துகொள்ள இயலும்.

**<u>கற்றல் விளைவுகள்</u>** :

- நிறுமம் என்பது தன்னார்வமாக செயல்படும் நபர்களின் சங்கம். இது ஒரு தனிச் சட்டப்பூர்வமான நிறுவனமாகும். இது நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியது மற்றும் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

- ❖ நிறுமம் நேர்மைப்பங்குகளை ரொக்கத்திற்கோஅல்லது ரொக்கத்திற்காகஇல்லாமல் மறுபயனுக்காகவோ வெளியீடு செய்யலாம். ரொக்கத்திற்காகவெளியிடப்படும்போது ரொக்கமானது (i) தவணைமுறையிலோ (ii) ஒரேதடவையாகவோ பெறப்படலாம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

**<u>கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:</u>**

- ❖ PPT, Videos, QR codes
- ❖ சமீபத்தில் வெளியீடு செய்யப்பட்ட, உரிமை வெளியீடு மற்றும் மேலூதிய பங்கு வழங்கிய நிறுமங்களின் பட்டியல்
- ❖ Website : Screener.com

<u>முன்னறிவு</u> :

- ❖ 11 - ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள கூட்டுப் பங்கு நிறுமம் பாடத்தில் உள்ள கருத்துக்களான பங்குகள், பங்கு மூலதனம், பங்குதாரர், பங்காதாயம் போன்றவற்றை நினைவு படுத்துதல்.
- ❖ மேலும், 11 - ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள தொழில் நிதிமூலங்கள் பாடத்தில் உள்ள கருத்துக்களான நீண்டகால நிதி ஆதாரங்களில் நேர்மைப்பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் போன்ற கருத்துகளை தற்போதைய பாடக்கருத்தோடு இணைத்தல்.
- ❖ இரட்டைப்பதிவு முறையை நினைவு கூறுதல்

**<u>பாட அறிமுகம்:</u>**

- ❖ மனித தேவைகள் மற்றும் விருப்பங்கள் எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எதிர்கொள்ள, உற்பத்தியினைபெரிய அளவில் மேற்கொள்ளவேண்டும். இதற்கு, பேரளவு முதல் தேவை.
- ❖ அதனை திரட்டுவதற்கு பங்குகள் வெளியீடு செய்வது சிறந்த வழி ஆகும்.
- ❖ பங்கு வெளியீடு உலக அளவில் பிரபலம் அடைந்துள்ளதால், அவற்றைப் பற்றி அறிவதுடன், குறிப்பேட்டுப் பதிவுகளையும், பதிவு செய்யும் முறையையும் அறிந்துகொள்ளலாம் என பாடம் அறிமுகம் செய்தல்.

**<u>பாட வளர்ச்சி</u>**

**<u>கற்றல் கற்பித்தல் செயல்பாடு</u>:**

**<u>ஆசிரியர் செயல்பாடு</u>:**

- ❖ ஒரு நிறுமத்தின் முதல், குறிப்பிட்ட பண மதிப்பிலான சிறிய அலகுகளாகப் பிரிக்கப்படுவதையே 'பங்குகள்' என அழைக்கப்படுகின்றன.
- ❖ லின்ட்லே பிரபு அவர்களின் கூற்றுப்படி, "பொதுவான பங்கிற்காக பணம் அல்லது பண மதிப்பினை வழங்கி அதனை சில தொழில் அல்லது வணிகத்தில் பயன்படுத்தி, அதிலிருந்து பெறும் இலாபம் மற்றும் நட்டங்களைப்பகிர்ந்து கொள்ளும் பல நபர்களின் கூட்டமைப்பேநிறுமம் ஆகும். பங்களிப்பாகபெறக்கூடிய பொதுப்பங்குகளின் பண மதிப்பேநிறுமத்தின் மூலதனம் ஆகும். அம்மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்யும் நபர்கள் அல்லது அந்நிறுமத்தைஉருவாக்குபவர்கள் அல்லது அந்நிறுமம் யாருக்குச் சொந்தமானதோ அவர்கள் நிறுமத்தின் உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிய மூலதனத்தின் பகுதி அவருக்கான பங்கு ஆகும்".
- ❖ பங்குகளின் வகைகள்
    1) முன்னுரிமைப்பங்குகள் மற்றும்
    2) நேர்மைப்பங்குகள்
- ❖ பங்கு முதலின் பல்வேறு பிரிவுகளை குறிப்புகள்
    - (i) அங்கீகரிக்கப்பட்ட முதல்
    - (ii) வெளியிட்ட முதல்
    - (iii) ஒப்பிய முதல்
    - (iv) அழைக்கப்பட்ட முதல்
    - (v) செலுத்தப்பட்ட முதல்
    - (vi) காப்பு முதல்
- ❖ வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட, விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.
- ❖ பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பைவிட, அதிகமாகப் பெறப்பட்ட தொகை, அழைப்பு முன்பணம் எனப்படும்.
    - ➢ மேற்கண்டவைகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தல்.

**மாணவர் செயல்பாடு:**

- ❖ உலகில் நிறுமங்கள் தவிர்க்க இயலாத சக்தியாக இருப்புதால், அவற்றைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள். இரட்டைப்பதிவு முறையை பயன்படுத்தி கணக்கீடு செய்து, புரிந்து கொண்டு குறிப்பேட்டுப் பதிவுகளை மேற்கொள்ளுதல்.

**வலுவூட்டல் :**

- ❖ குறிப்பேட்டுப் பதிவுகளை பதிவு செய்யும்போது – விண்ணப்பத்தொகை பெறும்போது ரொக்கப் பதிவு முதலிலும், பிறகு மாற்றுப்பதிவு செய்யவும், இதர நிலுவை தொகை பெறும்போது ( ஒதுக்கீடு , அழைப்புகள் ) முதலில் மாற்றுப்பதிவும், பிறகு ரொக்கப் பதிவையும் பதிவிட வேண்டும் என்ற கருத்தை வலுவூட்டச் செய்து மனதில் பதிய வைத்தல்

**மதிப்பீடு செய்தல் :**

**எளிய சிந்தனை வினாக்கள் :** 1) நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?

2) பங்கு என்றால் என்ன?

**நடுத்தர சிந்தனை வினாக்கள் :** 1) மிகை ஒப்பம் என்றால் என்ன?

2) பங்கு முதலின் பல்வேறு பிரிவுகளை குறிப்பிடுக

**உயர் சிந்தனை வினாக்கள் :** 1) அழைப்புமுன் பணத்திற்கு பங்காதாயம் ஏதும் செலுத்த வேண்டியது இல்லை ஏன்?

2) நேர்மைப்பங்குகளின் வேறு பெயர்களை குறிப்பிடுக

**குறை தீர் கற்றல்**

- ❖ தவணை முறையில் பங்குமுதலானது பெறும்போது, கணக்கீடு செய்வதில் தவறு செய்ய வாய்ப்புள்ள மாணவர்களை கண்டறிந்து, தோழமை உணர்வோடு கணக்கீடு செய்வது எப்படி என்பதை எளிமையாக புரியவைத்தல்.

**செயல்பாடு :**

- ❖ மாணவர்களை குழுக்களாகப் பிரித்து விண்ணப்பம் பெறும்போது, ஒதுக்கீடு செய்யும்போது, அழைப்புகளின்போது மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளை கூறச் செய்தல்.

**தொடர் பணி :**

- ❖ பங்குமுதலின் பிரிவுகள் சார்ந்து, உன் சொந்த நடையில் எடுத்துக்காட்டுகளுடன் ஒரு பக்க அளவில் ஓர் ஒப்படைவு தயார் செய்ய மாணவர்களை அறிவுறுத்தல்.

---

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : **அக்டோபர் இரண்டாம் வாரம்**

**Prepared by: S. Anbu**
**CSM MPL HSS Pillaiyarpalayam,**
**Kancheepuram (Dist) Cell: 97868 51452**

தலைப்பு : அலகு 7 **நிறுமக் கணக்குகள்**

**(7.8.4 அழைப்பு நிலுவையில் இருந்து 7.8.7 பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் - எ.கா. 16 வரை)**

**கற்றல் நோக்கங்கள் :**

மாணவர்கள்

- ❖ "அழைப்பு நிலுவை" கருத்தையும், அது சார்ந்த குறிப்பேட்டுப் பதிவுகள்
- ❖ பங்குகள் ஒறுப்பிழப்பு
- ❖ ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்
- ❖ பங்குகளை முனைமத்தில் வெளியிடல் ஆகியவற்றை புரிந்துகொள்ள இயலும்.

**கற்றல் விளைவுகள்** :

- ❖ பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை அல்லது அழைப்புத் தொகையை செலுத்தத் தவறினால், இன்னமும் செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' என்பதை புரிந்து கொள்ள முடியும்.
- ❖ பங்குதாரர் ஒருவர், ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும் என்பதை அறிந்து கொள்ள முடியும்.
- ❖ ஒரு நிறுமம், தனது முகமதிப்பில் உள்ள பங்கின் மதிப்பினை, அதிகரித்து வெளியிடுவது பங்கு முனைமம் ஆகும் என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:**

- ❖ PPT, Videos, QR codes
- ❖ பங்கு வெளியீட்டில் ஈடுபட்டு இருக்கும் நிறுமத்தின் தகவலறிக்கை
- ❖ Website : Screener.com

**முன்னறிவு** :

- ❖ 11 - ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள கூட்டுப் பங்கு நிறுமம் பாடத்தில் உள்ள செயல்முறை விதிகளில் பங்குகள் வெளியீடு, பங்குகள் மீதான அழைப்பு பணம் செலுத்த அழைப்பு விடுத்தல் போன்றவற்றை நினைவு படுத்துதல்.
- ❖ இரட்டைப்பதிவு முறையை நினைவு கூறுதல்

**பாட அறிமுகம்:**

- ❖ அழைக்கப்பட்டும், செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.
- ❖ இந்திய நிறுமச் சட்டம், 2013 அட்டவணை F- ன் படி, நிறும செயல்முறைவிதிகளில் உள்ளவாறு அழைப்பு நிலுவைக்கு வட்டி வசூலிக்கப்படும். அவ்வட்டி வீதம் ஆண்டுக்கு 10% மேல் மிகக் கூடாது.
- ❖ அழைப்பு நிலுவை தொடரும் பட்சத்தில் பங்கை பறிமுதல் செய்யவும் நிறும விதிகள் உள்ளது.
- ❖ அப்போது இதுவரை செலுத்திய தொகை பறிபோகவும், பங்குநர் என்ற அந்தஸ்தையும் இழக்க நேரிடுகிறது என்ற பாட கருத்தை அறிமுகம் செய்தல்.

**பாட வளர்ச்சி**

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**:

**ஆசிரியர் செயல்பாடு**:

- ❖ அழைப்பு நிலுவையைப்பதிவு செய்ய இரண்டு முறைகள் உள்ளன. அவை,
  1) அழைப்பு நிலுவைக் கணக்கு துவங்காதபோது
  2) அழைப்பு நிலுவைக் கணக்கு துவங்கும்போது
- ❖ பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தல்
- ❖ ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்
- ❖ பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல்
- ❖ மேற்கண்டவைகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தல்.

**மாணவர் செயல்பாடு:**

- ❖ அழைப்பு நிலுவை ஏற்படும்போது பதிவு செய்யப்பட வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளை பதிவு செய்தல்
- ❖ ஒறுப்பிழப்பு, மறுவெளியீடு, முதலின காப்பு போன்ற நிலைகளில், இரட்டைப்பதிவு முறையை பின்பற்றி கணக்கீடு மூலம் குறிப்பேட்டுப் பதிவுகளை பதிவு செய்தல்.

**வலுவூட்டல்** :

- ❖ அழைப்பு நிலுவை , ஒறுப்பிழப்பு, மறுவெளியீடு சார்ந்த கணக்குகளை மீண்டும், மீண்டும் போடச் செய்து பாடக் கருத்துகளை மாணவர்கள் மனதில் பதிய வைத்தல்.

**மதிப்பீடு செய்தல்** :

**எளிய சிந்தனை வினாக்கள்** : 1) ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?

2) பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன?

**நடுத்தர சிந்தனை வினாக்கள்** : 1) பத்திரமுனைமம் என்றால் என்ன?

2) அழைப்பு நிலுவையைப் பதிவு செய்ய எத்தனை முறைகள் உள்ளன? அவை யாவை?

**உயர் சிந்தனை வினாக்கள்** :

1) ஒரு நிறுமம் வெளியிட்ட பங்குகளை ஒறுப்பிழப்பு செய்வதால் யாருக்கு ஆதாயம் ? மற்றும் யாருக்கு இழப்பு ஏற்படுகிறது?

2) பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகிறது?

**குறை தீர் கற்றல்**

- கருத்துக்களைப் புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை கண்டறிந்து, பத்திர முனைமம், தள்ளுபடி, ஒறுப்பிழப்பு போன்ற கருத்துகளை திரும்ப , திரும்ப சொல்லி குறிப்பேட்டுப் பதிவுகளை போடவைத்தல்

**செயல்பாடு** :

- வகுப்பறையில் உள்ள மாணவர்களில் ஒருவரை பங்குதாரராகவும், மற்றொரு மாணவரை நிறுமமாகவும் நடிக்கச் செய்து, அழைப்பு நிலுவை, பங்கு ஒறுப்பிழப்பு, மறுவெளியீடு போன்ற கருத்துகளை கலந்துரையாடச் செய்தல்.

**தொடர் பணி** :

- ஒரு நிறுமம் பங்குகளை முனைமத்தில் வெளியிடுவது சார்ந்த குறிப்பேட்டுப் பதிவுகளை உன் சொந்த எடுத்துக்காட்டுகளுடன் ஓர் ஒப்படைவு தயார் செய்ய மாணவர்களை அறிவுறுத்தல்.

---

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : **அக்டோபர் மூன்றாம் வாரம்**

Prepared by: S. Anbu
CSM MPL HSS Pillaiyarpalayam,
Kancheepuram (Dist) Cell: 97868 51452

தலைப்பு : அலகு 7 **நிறுமக் கணக்குகள்**

(7.8.7பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் ( எ.கா 17 முதல் ) இருந்து 7.10ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல் வரை)

**கற்றல் நோக்கங்கள்** :

மாணவர்கள்

- விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு செய்தல்
- பங்குகளை முகமதிப்பில், முனைமத்தில் வெளியிடல்
- நிறுமம் நிலைச் சொத்துகளை வாங்கும்போது அதற்கு விலை என்ற மறுபயனுக்குப்பதில், நிறுவனப் பங்குகளை மறுபயனாக வெளியிடல்
- ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல் ஆகியவற்றை புரிந்துகொள்ள இயலும்.

**கற்றல் விளைவுகள்** :

- தற்போதைய நிலையில் நிறுமங்கள் பங்குகளை வெளியிடும்போது பல தவணைகளாக தொகை பெறுவதைக் காட்டிலும், பெரும்பாலும் ஒரே தவணையாக மொத்தமாக பெறும் வகையில் தான் செயல்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்கின்றனர்.
- நிறுமங்கள் நிலைச் சொத்துக்களை வாங்கும்போது, ரொக்கமாக பெறாமல், பங்குகளாக பெறுவது எதிர்காலத்திற்க்கு சிறந்த பலனைத் தரும் என பகுத்தறிகின்றனர்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:**

PPT, Videos, QR codes

**முன்னறிவு** :

- 11 ஆம் வகுப்பில், கூட்டுப் பங்கு நிறுமப் பாடத்தில், நிறுமம், பங்குகளை வெளியிட்டு, மூலதனத்தை திரட்டுகிறது என்ற கருத்தை தற்போதைய பாடக் கருத்துகளோடு தொடர்புபடுத்துதல்.
- இரட்டைப்பதிவு முறையை மீண்டும் நினைவு கூறுதல்

**பாட அறிமுகம்:**

- நிறுமங்கள் பங்குகளை முகமதிப்பிலோ அல்லது முனைமத்திலோ வெளியிட்டு, அதற்குரிய தொகையை, ஒரே தவணையில் செலுத்தக் கோரும் சில நிறுமங்கள், ஒரு சில நிலைச் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு மறுபயனாக பங்குகளை வெளியிடும்.
- இச்சூழ்நிலைகளில், ஒரு நிறுமம் பதிவுகளை மேற்கொள்ளும்போது இரட்டைப் பதிவு முறையை பின்பற்றி பதிவு செய்யும் முறையை அறிந்து கொள்ளளாம் என அறிமுகம் செய்யலாம்.

**பாட வளர்ச்சி**

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு:**

**ஆசிரியர் செயல்பாடு**

- பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் – மிகைஒப்ப நிலையில் – விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு செய்தல் – அழைப்புத் தொகை செலுத்தத் தவறுதல், ஒறுப்பிழப்பு செய்தல்.
- குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யும் முறையை விளக்கி கூறுதல்.
- மொத்தத் தொகையில் ரொக்கத்திற்கு பங்குகளை வெளியீடு செய்தல்

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | 1) விண்ணப்பத்தொகை பெறும்போது<br>வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு | | XXX | <br>XXX |
| | 2) விண்ணப்பத்தொகையை மாற்றும்போது<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>பத்திர முனைமம் க/கு ( முனைமத்தில் வெளியிட்டால் ) | | XXX | <br>XXX<br>XXX |

**மாணவர் செயல்பாடு:**

- ஒரு நிறுமம் வேறு ஒரு நிறுவனத்தை வாங்கும்போதும், தோற்றுவிப்பாளரின் பணிக்காகவும், தரகர் மற்றும் ஒப்புறுதியாளருக்கு கழிவு கொடுக்கவும், ரொக்கம் தராமல், பங்குகளை வெளியிட இரட்டைப் பதிவு முறையின் பொன்னான விதிமுறைகளை அறிந்து குறிப்பேட்டுப் பதிவுகளை பதிவிடவும் ஊக்குவித்தல்.

**வலுவூட்டல்** :

- ரொக்கம் அல்லாத மறுபயனுக்கு பங்குகளை முனைமத்தில் வெளியிடும்போது மேற்கொள்ளப்படும் குறிப்பேட்டுப் பதிவுகள் சார்ந்த கணக்குகளை திரும்பத் திரும்ப கேள்விகள் கேட்டு புரியவைத்தல்.

மதிப்பீடு செய்தல் :

**எளிய சிந்தனை வினாக்கள்** : 1) ₹. 8 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை எவ்வளவு?

**நடுத்தர சிந்தனை வினாக்கள்** : 1) ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?

**உயர் சிந்தனை வினாக்கள்** : 1) நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச்சொத்துகளை வாங்கும்போது, ரொக்கத்திற்கு பதிலாக பங்குகளை வெளியிட முடியுமா? விடைக்கான காரணம் கூறவும்?

**குறை தீர் கற்றல்**

- ❖ கருத்துக்களைப் புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை கண்டறிந்து, எளிய நடையில் கருத்துக்களை புரியும் வகையில் திரும்ப , திரும்ப சொல்லி குறிப்பேட்டுப் பதிவுகளை போடவைத்தல்

**செயல்பாடு** :

- ❖ வகுப்பறையில் உள்ள மாணவர்களில் ஒருவரை நிறுமமாகவும், மற்றொரு மாணவரை நிலைச்சொத்துக்களை வைத்து இருப்பது போலவும் செயல்பட வைத்து, ரொக்கம் அல்லாத மறுபயனுக்கு பங்குகளை வெளியிடும் கருத்துகளை கலந்துரையாடச் செய்தல்.

**தொடர் பணி** :

- ❖ மூன்று வரையறு நிறுமங்களின் தகவலறிக்கையைப் பெறவும். அவற்றை வாசித்து இந்த பாடப்பகுதியில் நீங்கள் கற்றுக் கொண்ட விவரங்களை அடையாளம் காணவும். அதில், கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யக் கோருதல்.

---

**வகுப்பு:12**

**பாடம் : கணக்குப்பதிவியல்**

தேதி : அக்டோபர் நான்காம் வாரம்

தலைப்பு : அலகு 7 **நிறுமக் கணக்குகள்**

**Prepared by: S. Anbu**
**CSM MPL HSS Pillaiyarpalayam,**
**Kancheepuram (Dist) Cell: 97868 51452**

**கற்றல் நோக்கங்கள்**

மாணவர்கள்

(1). நிறுமம் நிலை சொத்துக்களை வாங்கும் போது விலை என்ற மறுபயனுக்கு பதிலாக

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிடும் நிலையிலும் (ii)பங்குகளை 50% முனைமத்தில் வெளியிடும் நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய குறிப்பிட்டு பதிவுகளை அறிந்து கொள்கிறேன் கொள்கின்றனர்.

(2) நிறுமக் கணக்குகள் பாடத்தில் எந்த அளவிற்கு புரிந்து ஒன்றனர் என்பதை அடைவு தேர்வு நடத்தி மதிப்பீட்டு ஒவ்வொருவரும் தங்கள் அடைவை அறிந்து கொள்கின்றனர்

**கற்றல் விளைவுகள்**

மாணவர்கள்

நிறுமங்கள் நிலை சொத்துக்களை வாங்கும்போது ரொக்கமாக வாங்காமல் பங்குகளாக பெறும்போது எதிர்காலத்தில் நிறுமம் லாபம் ஈட்டும் போது பங்குகளின் மதிப்பு உயரவும் பங்குகளின் மீதான ஈவுத்தொகை பெறவும் ஊக்க பங்குகள் கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது என்பதை உணர்கிறார்கள்

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**

PPT,Videos,QR Codes

**முன்னறிவுடன் இணைத்தல்**

11ம் வகுப்பில் கற்ற இரட்டைப்பதிவு முறையை மீட்டெறிந்து தற்போதைய பாடத்தோடு தொடர்புடைய ரொக்கத்திற்கு அல்லாத மறு பயனுக்காக பங்குகளை வெளியிடுதல் சார்ந்த குறிப்பேட்டுப் பதிவுகளுக்கு பயன்படுத்துதல்

**பாட அறிமுகம்**

நிறுமங்கள் நிலைச் சொத்துக்களை பெற்றுக் கொண்டு அவற்றுக்கு பதிலாக பங்குகளை வெளியிடும் இதுபோன்ற சூழ்நிலைகளில் இரட்டை பதிவு முறையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிமுகம் செய்தல்

**பாட வளர்ச்சி**

7.10 ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல்

(i) சொத்துகளை வாங்கும் போது

குறிப்பிட்ட சொத்து க/கு ப xxx

விற்பனையாளர் க/கு xxx

(ii) பங்குகளை வெளியிடும்போது

விற்பனையாளர் க/கு ப xxx

நேர்மைப் பங்குமுதல் க/கு xxx

பத்திர முனைமக் க/கு xxx

(முனைமத்தில் வெளியிட்டால்)

**எ.கா** x என்ற நிறுமம் ₹15,00000 மதிப்புள்ள நிலத்தை y நிறுவனத்திடம் இருந்து வாங்கியது அது பங்கு கொன்று ₹10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப் பங்குகளாக 50% முனைமத்தில் வெளியிட்டது இந்நிலையில் குறிப்பேட்டுப் பதிவுகளை தருக .

வெளியிடப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கையை கணக்கிடுதல்

மொத்த தொகை= ₹15,00,000 பங்குகளின் முகமதிப்பு= ₹10 முனைமம்= 50% முனைமத்தொகை 10x50%

i.e.,10x50/100=₹5

வெளியீட்டு விலை= முக மதிப்பு + முனைமம்=₹15

வெளியிடப்பட வேண்டிய நேர்மை பங்குகளின் எண்ணிக்கை =மொத்தத் தொகை/ வெளியீட்டுத் தொகை =₹1500000/15=100000

குறிப்பேடு பதிவுகள்

நிலம் க/ கு ப 1500000

Y நிறுவன க/ கு 1500000

( நிலம் வாங்கியது )

Y நிறுவன க/ கு ப 1500000

நேர்மைப் பங்கு முதல் க/கு(100000x10) 1000000

பத்திர முனைமக் க/கு (100000x5) 500000

(பங்குகொன்று ₹வீதம் பங்குகள் முனைமத்தில் வெளியிட்டது)

**மாணவர் செயல்பாடு**

ஒரு நிறுமம் வேறு ஒரு வணிக நிறுவனத்தை வாங்கும் போது ரொக்கம் தராமல் நிறுமம் தனது பங்குகளை வணிக நிறுவனத்திற்கு தருகிறது. இச் சூழலில் இரட்டைப் பதிவு முறையில் பொன்னான விதிமுறைகளை பயன்படுத்தி குறிப்பேட்டுப் பதிவுகளை பதிவிட அறிவுறுத்தப்படுகின்றனர்

**வலுவூட்டல்**

ரொக்கத்திற்கு பங்கு வெளியீடு ரொக்கமில்லா மறுபயனுக்கு பங்குகள் வெளியீடு போன்ற சூழல்களில் மேற்கொள்ளப்படும் குறிப்பேட்டுப் பதிவுகளில் இரட்டை பதிவு முறையை பின்பற்றி திரும்ப திரும்ப பயிற்சி பெறுவதன் மூலம் பாடக் கருத்துகளில் வலுவூட்டல் திறன் பெறுகிறார்கள்.

**மதிப்பீடு**

பொருத்தமான விடையை தேர்ந்தெடுக்கவும்

1. ABC நிறுமம் ₹1000000 மதிப்புள்ள நிலத்தை XYZ நிறுவனத்திடம் இருந்து வாங்கியது. ABC நிறுமம் நிலத்திற்கு ஈடாக xyz நிறுவனதிற்கு ₹10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மை பங்குகள் வழங்கியது எனில் வழங்கிய பங்குகளின் எண்ணிக்கை

a) 10 b) 10,00,000 c) 1,00,00,000 d) 1,00,000

2.ஒரு நிறுமம் நேர்மை பங்குகளை வெளியீடு செய்து ரொக்கமாக பெறப்படுவது

(i) தவணை முறையில்

(ii) ஒரே தடவையாக (மொத்தத் தொகை)

a) (i) மட்டும் சரியானது b) (ii) மட்டும் சரியானது

c) (i) மற்றும் (ii) சரியானது d) (i) மற்றும் (ii) தவறானவை

**குறைதீர் கற்றல்**

ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்கு பங்குகளை வெளியிடும்போது மாணவர்களின் சிலர் புரியாமல் பாட கருத்துக்களை மனனம் செய்வர் அப்படிப்பட்ட மாணவரை இனம் கண்டறிந்து எளிய நடையில் கருத்துக்களை புரிய வைத்து குறிப் பேட்டுப் பதிவுகளை செய்ய வழிகாட்டல்.

**செயல்பாடு**

மாணவரை நிறுமமாக செயல்படவும் மற்றொரு மாணவர் நிலைச்சொத்துக்களை வைத்து இருப்பது போலவும் செயல்பட வைத்து (நாடகம் முறை) ரொக்க அல்லாத மறுபயனுக்கு பங்குகளை வெளியிடும் கருத்துக்களை எளிதில் புரிய வைக்கலாம் மாணவர் பங்கேற்புடன் கூடிய கலந்துரையாடல்கள் பாடக் கருத்துக்கள் வலுவூட்டம் பெற உதவுகின்றன.

**தொடர் பணி**

நிறுமக் கணக்குகள் பாடத்தில் எவ்வளவு தூரம் மாணவர்கள் புரிந்து கொண்டனர் என்பதை அறிய அடைவு சோதனை(Achivement Test) நடத்தி அடைவுகளை அளவிடலாம். அலகு தேர்வு, சிறு தேர்வு, ஒப்படைவுகள் & உள்நிலைத் தேர்வுகள் மூலம் இப்பாடத்தில் மாணவர் அடைந்த திறனை சோதனையிடலாம்.

---

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : **நவம்பர் முதல் வாரம்**

தலைப்பு : அலகு 8. **நிதிநிலைஅறிக்கைபகுப்பாய்வு**

**Prepared by: S. Anusuya, M.com, B.Ed, MPhil**
**Govt. Hr. Sec. School, Melakottai Madurai (Dist)**
**Cell: 9942952873**

**கற்றல்நோக்கங்கள்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் பொருள் மற்றும் நோக்கங்களை பற்றி புரிந்து கொள்ளுதல்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை புரிந்து கொள்ளுதல்

**கற்றல் விளைவுகள்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாவின் பொருள் பற்றி அறிந்து கொண்டனர்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு நோக்கங்களை பற்றி தெரிந்து கொண்டனர்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பற்றி புரிந்து கொண்டனர்

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**

Ppt, QR Code, News Paper Cutting, etc…

**முன்னறிவு**

வியாபார நிறுவனங்கள் இலாபத் தன்மை மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள ஒரு கணக்கு ஆண்டின் இறுதியில் வருமான அறிக்கை அதாவது வியாபார இலாப நட்ட கணக்கும் நிதிநிலையை அறிந்து கொள்ள இருப்புநிலை குறிப்பு தயாரிக்கப்படுகிறது என்று 11 ம் வகுப்பில் கற்ற இறுதி கணக்குகளை நினைவுபடுத்துதல்

**பாடஅறிமுகம்**

ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே நிதிநிலை அறிக்கைகள் ஆகும்

வருமான அறிக்கை இருப்பு நிலை குறிப்பை தவிர வியாபார நிறுவனங்கள் ரொக்க ஒட்ட அறிக்கை, நிதி ஒட்ட அறிக்கை மற்றும் நிதிநிலை மாற்ற அறிக்கை போன்றவைகளையும் தயாரிக்கலாம்

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

நிதி நிலை அறிக்கையின் இயல்புகளான

ஒரு கணக்கு ஆண்டி இறுதியில் கணக்கீடுகளின் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கையில் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன

ஒட்டு மொத்த நிறுவனத்திற்கும் தயாரிக்கப்படுகின்றன

அர்த்தமுள்ள தகவல்களை தருகிறது

புராதன அடக்கவிலை அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன

நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவமான மேலாண்மை பங்குதாரர்கள் எதிர்கால முதலீட்டாளர்கள் கடனீந்தோர் வங்கியாளர்கள் அரசாங்கங்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிறுவனத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை வெளிப்படுத்துகின்றன

**ஆசிரியர் செயல்பாடு**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு என்பது நிதிநிலை அறிக்கையில் காணப்படும் பல்வேறு விவரங்களுக்கு இடையேயான தொடர்புகளை கண்டறிந்து மதிப்பிட்டு ஒப்பீடு செய்வதே ஆகும்

இது வணிக நிறுவனத்தின் செயல்பாடுகளையும் நிதிநிலையையும் புரிந்து கொள்வதற்கு வழி செய்கிறது

இதன் நோக்கங்களான வருவாய் ஈட்டும் தன்மை மற்றும் இலாபம் ஈட்டும் திறனை ஆய்வு செய்வது

நீண்ட கால குறுகிய கால கடன் தீர்க்கும் திறனை அறிய

நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் திறமையை தீர்மானிக்க

**மாணவர் செயல்பாடு**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்வதற்கு பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன

பகுப்பாய்வு செய்வதன் நோக்கத்தின் அடிப்படையில் அக்கருவிகள் தேர்வு செய்யப்படுகின்றன

அவை ஒப்பிட்டுஅறிக்கை

பொது அளவு அறிக்கைகள்

போக்கு பகுப்பாய்வு

ரொக்க ஓட்ட பகுப்பாய்வு

**வலுவூட்டல்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு என்பது பகுப்பாய்வு மற்றும் அது குறித்த விளக்கமளித்தளையும் கொண்டதாகும்

பகுப்பாய்வு என்பது கணக்கிடப்பட்ட தொகைகளை சோதனை செய்தல் மற்றும் அவற்றிற்கிடையான தொடர்பினை ஏற்படுத்துதல் என்று விளக்குதல்

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினாக்கள்**

இருப்பு நிலைகுறிப்பு வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய தகவல்களை வழங்குகிறது

**நடுத்தர சிந்தனை வினாக்கள்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்

**உயர் சிந்தனை வினாக்கள்**

நிதிநிலை அறிக்கைகள் கடந்தகால விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன இது எப்படி ஒரு குறைபாடாகும் என்று விளக்கவும்

**குறைதீர் கற்றல்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு என்பது வியாபார நிறுவனங்களின் செயல்பாடுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான காரணங்களை கண்டறிவதற்கு அவற்றை ஒப்பீடு செய்வதைக் குறிக்கும்

உய்த்துணர்தல் என்பது பகுப்பாய்வின் முடிவுகளை விவரித்தல் மற்றும் விளக்குதலை குறிக்கும்

**செயல்பாடு**

ஒரு தணிக்கையாளரை வகுப்பிற்கு வரவழைத்து பல்வேறு வணிக அமைப்புகளின் நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பது குறித்து கலந்துரையாடல்

**தொடர்பணி**

இந்திய நிறுமச் சட்டம் 2013ன் படி நிதிநிலை அறிக்கைகளை ஏன் தயாரிக்க வேண்டும் என்பதை பற்றி வகுப்பறையில் கலந்து உரையாடல்

வகுப்பு:12 Prepared by: S. Anusuya, M.com, B.Ed, MPhil

பாடம் : **கணக்குப்பதிவியல்** Govt.Hr.Sec.School, Melakottai Madurai (Dist)

தேதி : **நவம்பர் இரண்டாம் வாரம்** Cell: 9942952873

தலைப்பு : அலகு 8. **நிதிநிலைஅறிக்கைபகுப்பாய்வு**

**கற்றல் நோக்கங்கள்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் பொருள் பற்றி அறிந்து கொள்ளுதல்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்யும் கருவிகளை பயன்படுத்துதல் பற்றி புரிந்து கொள்ளுதல்

**கற்றல் விளைவுகள்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளான ஒப்பீடு அறிக்கை பொதுஅளவு அறிக்கை போக்கு பகுப்பாய்வு பற்றி புரிந்து கொண்டனர்

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**

Ppt, QR Code, News Paper Cutting, etc...

**முன்னறிவு**

நிதிநிலை அறிக்கையில் காணப்படும் பல்வேறு விவரங்களுக்கு இடையேயான தொடர்புகளை கண்டறிந்து மதிப்பீடு மற்றும் ஒப்பீடு செய்வது என்று நிதிநிலை அறிக்கை பற்றி நினைவுபடுத்தி பாடத்தை தொடருதல்

**பாட அறிமுகம்**

ஒப்புநோக்கு அறிக்கைகளை தயாரித்தல்

ஒப்புநோக்கு அறிக்கை ஐந்து பத்திகளை கொண்டது

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

ஒப்புநோக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய நிலைகள் பின்வருமாறு

பத்தி 1: இந்த பட்டியில்வருமானஅறிக்கைமற்றும்இருப்புநிலைகுறிப்பில்உள்ளவிவரங்கள்பதியப்படும்

பத்தி 2: முதல் ஆண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்

பத்தி 3: இரண்டாம் ஆண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்

பத்தி 4: முதல் வருடம் மற்றும் இரண்டாம் வருடம் தொகைக்கு இடையான வேறுபாட்டை காட்டவும்

பத்தி5: நாலாம் பத்தி தொகையினை இரண்டாம் பத்தி தொகையுடன் வகுத்து நாலாம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தை காட்டவும்

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடுதல் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}}$$

**ஆசிரியர் செயல்பாடு**

பொது அளவு அறிக்கைகள் தயாரித்தல்

பத்தி1: வருமான அறிக்கை அல்லது இருப்பு நிலை குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன

பத்தி 2: தொகையினை பதிவு செய்யவும்

பத்தி 3: பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துச் சொல்லவும்

**மாணவர்செயல்பாடு**

போக்கு பகுப்பாய்வினை தயாரித்தல்

கொடுக்கப்பட்ட ஆண்டுகளில் முதல் வருடம் அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்

அடிப்படை ஆண்டின் எண்ணாக 100 எடுத்துக் கொள்ளவும்

அடிப்படை ஆண்டின் எண்ணில் இருந்து மற்ற ஆண்டுகளில் சதவீதத்தை வெளிக் கொண்டு வந்து போக்கினை கணக்கிடலாம்

**வலுவூட்டல்**

நிறுமத்தின் நிதிநிலை அறிக்கையான இந்திய நிறுமச் சட்டம் 2013 பிரிவு 129 (1) ல் குறிப்பிட்ட கணக்கியல் தர நிலைகளை பின்பற்றாத போது நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் கணக்கியல் தரநிலைகளிலிருந்து வேறுபடும் இடங்கள் அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் அவ்வேறுபாட்டினால் நிதிநிலையில் ஏற்படும் விளைவுகள் குறித்து நிதிநிலை அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும் என்று விளக்குதல்

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினாக்கள்**

ஒரு பொது அளவு இருப்பு நிலை குறிப்பில் நீண்ட கால சொத்துக்களின் சதவீதம் 75 எனில் நடப்பு சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?

**நடுத்தர சிந்தனை வினாக்கள்**

நடை முறை முதல் என்றால் என்ன

**உயர் சிந்தனை வினாக்கள்**

பொது ஒப்பிட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்

**குறைதீர் கற்றல்**

நிதிநிலை அறிக்கை பகுப்பாய் கருவிகளை புரிந்து கொள்வதில் சிரமப்படும் மாணவர்களுக்கு பின்வருமாறு விளக்குதல்

ஒரு வியாபார நிறுவனத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கையில் காணப்படும் பல்வேறு தனிப்பட்ட விவரங்களின் நிகர உயர்வு அல்லது குறைவு ஆகியவற்றை ஒப்பிட்டு தரக்கூடிய அறிக்கை

பொது அளவு அறிக்கைகள் சில பொதுவான அடிப்படையிலான பல்வேறு விவரங்களின் தொடர்பினை காட்டுவதாகும்

போக்கு என்பது இயக்கத்தின் போக்கினை குறிப்பதாகும். ஒரு கால கட்டத்திற்கு மேல் உள்ள தொகைகளின் இயக்கத்தை ஆய்வு செய்வதாகும்

**செயல்பாடு**

செய்தித்தாள்கள் வணிக இதழ்கள் மற்றும் இணைய தளங்களில் இருந்து ஒரே வகையான நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை சேகரித்து ஒப்பீடு செய்வது அவைகளை பகுப்பாய்வு செய்யவும்

**தொடர்பணி**

குழு செயல் பாடாக கணக்குப்பதிவியல் மற்றும் பிற பாடங்களில் குறைந்தது நான்கு வகுப்பு தேர்வுகளின் மதிப்பெண்களை பதிவுசெய்யவும் போக்கு சதவீதத்தை பயன்படுத்தி மாணவர் மதிப்பெண்களை பகுப்பாய்வு செய்து வர செய்தல்

---

**வகுப்பு:12**

**பாடம் : கணக்குப்பதிவியல்**

தேதி : **நவம்பர் மூன்றாம் வாரம்**

தலைப்பு : அலகு 9 விகிதப்பகுப்பாய்வு

Prepared by: S. Anusuya, M.com, B.Ed, MPhil
Govt.Hr.Sec.School, Melakottai Madurai (Dist)
Cell: 9942952873

கற்றல் நோக்கம்:-

- ❖ கணக்கியல் விகிதங்களின்பொருள் புரிந்துகொள்ளுதல்
- ❖ கணக்கியல் விகிதங்களின் வகைப்பாடுளைப் புரிந்தகொள்ளுதல் பலவேறு விகிதஙளைக் கணக்கிடுதல்

கற்றல் விளைவுகள்:-

- ❖ விகிதப் பகுப்பாய்வு நிதநிலைப் பகுப்பாய்வு செய்யும் கருவிகளில் முக்கியமான ஒன்றாகும் என்பதை புரிந்து கொண்டனர்.
- ❖ நிதிநிலை அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கான பல்வேறு விகிதங்கள் கணக்கிடுதலை விகிதப் பகுப்பாய்வு உள்ளடக்கியது என்பதை தெரிந்து கொண்டனர்.
- ❖ விகிதப்பகுப்பாய்வு தொழில் நிறுவனத்தின் செயல்பாட்டினை அளவிடுவதற்கான ஒரு முக்கியமான மற்றும் சக்தி வாய்ந்த கருவியாகும் என்பதை புரிந்து கொணடனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :-

PPT, GROUP DISCUSSION, SITUATION GIVEN STUDENTS GIVE THEIR SUGGESTIONS, QR CODE ETC, (குழுவிவாதம், சூழலைக்காடுத்து அதற்கு மாணவர் கருத்துகளை தரசெய்தல்)

முன்னறிவு:-

முந்தைய பாடமான நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வில் உள்ள பொதுஅளவு அறிக்கை, ஒப்பிட்டு அறிக்கை,ரொக்க ஓட்ட அறிக்கை போன்ற கருவிகள் நிதிநிலை பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தப்படும் கருவிகள் என்பதை பாடத் தலைபோடு நினைவுபடுத்தல்

பாட அறிமுகம்:-

தனியாள் வணிகர் ஒருவர் தன்னுடைய தொழிலிலிருந்து ஆண்டுக்கு ரு.50,000 இலாபம் ஈட்டுகிறார். இந்த லாபம் அதிகமானதா, என்ற வினா எழப்பி ? (அதற்கு மாணவர்கள் கூறும் பதிலை வைத்து மேலும் ஆசிரியர் சரியான விளக்கமளித்து அறிமுகம் செய்வது)

(or)

விகிதம் என்பது இரண்டு தொடர்படைய or ஒன்றை ஒன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பை கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவது என்று அறிமுகம் செய்வது.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

கணக்கியல் விகிதங்களின் பொருள் விகிதப்பகுத்தாய்வின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்,நோக்கங்கள், வகைப்படும்.

ஆசிரியர் செயல்பாடு:-

விகிதங்கள் கணக்கிடுதல்

I. நீர்மை தன்மை விகிதங்கள்
   i)நடப்பு விகிதம்
   ii)விரைவு விகிதம்
II. நீண்ட கால கடன் த்ர்க்கும் திறன் விகிதங்கள்
   i) புற அக பொறுப்புகள் விகிதம்
   ii) உரிமையாளர் விகிதம்
   iii) முதல் உந்துதிறன்விகிதம்
III. சுழற்சிவிகிதங்கள்
   i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம்
   ii) கணக்குகள் முலம் பெற வேண்டிவைகளின் சுழச்சி விகிதம்
   iii) கணக்குள் முலம் சொலுத்தவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்
   iv) நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்
IV. இலாபத்தன்மை விகிதங்கள்
   i) மொத்த லாப விகிதம்
   ii) இயக்க அடக்கவிலை விகிதம்
   iii) இயக்கலாப விகிதம்
   iv) நிகரலாபவிகிதம்
   v) முதலீட்டின் மீதமான வருவாய்

வலுவூட்டல்:-

விகிதப்பகுப்பாய்வு சூத்திரங்களை ஒருவர் மாற்றி ஒருவராக சொல்ல செய்து விளக்கிக்கூறுதல்.

மதிப்பீடு:-

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

நடப்பு விகிதம் காட்டுவது..................

புற அகப் பொறுப்பு அளவிடுவது..............

நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT):

கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?

விரைவு விகிதம் என்றால் என்ன?

உயர் சிந்தனை வினாக்கள் (HOT):

இயக்க லாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

குறைதீர் கற்றல்:-

விகிதங்களை கணக்கிடுவதில் தடுமாற்றம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின்வரும் விளக்கம் தரப்படும்.

❖ கணக்கியல் விகிதம் நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெற்றுள்ள இரு இனங்கள் அல்லது அதற்கு அதிகமான இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பை கணிதவியல் முறையில்

கூறுவது (or)

மாவணவர்களை விகிதப்பகுப்பாய்வு சூத்திரங்கள் ஒவ்வொன்றையும் 5 முறை எழுத செய்து விளக்குதல்.

<u>மாணவர் செயல்பாடு:-</u>

மாணவர்களை ஒவ்வொரு விகிதங்களையும் கணக்கீடு செய்ய சொல்லி சரிபார்த்தல்

<u>தொடர் பணி:-</u>

❖ ஒரு வியாபாரிக்கு கடனைச் செலுத்துவதற்கு அவருடைய சரக்களித்தோர் அனுமதித்தது 30 நாட்கள் ஆனால் அவர் எடுத்த நாட்கள் 45. அதிக தகவல்களைப் பயன்படுத்தும் போது விகிதம் கணக்கிடுவது கடினமானதாகும். இதற்கு ஏதேனும் தீர்வு உள்ளதா? என்பதைப் பற்றி எழுதிவரச் செய்தல்.

************************************************************************************************************************************

**வகுப்பு:12** **Prepared by: S. Anusuya, M.com, B.Ed, MPhil**

**பாடம் : கணக்குப்பதிவியல்** Govt.Hr.Sec.School, Melakottai Madurai (Dist)

தேதி : **நவம்பர் நான்காவது வாரம்** **Cell: 9942952873**

தலைப்பு : அலகு 9 விகிதப்பகுப்பாய்வு

<u>கற்றல் நோக்கம்:-</u>

பல்வேறு விகிதங்களைக் கணக்கிடுதல் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

<u>கற்றல் விளைவுகள்:-</u>

நீர்மைத்தன்மை விகிதங்கள், நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள், சுழற்சி விகிதங்கள், இலாபத் தன்மை விகிதங்கள் பற்றி அறிந்துக் கொண்டனர்.

<u>கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :-</u>

PPT, VIDEOLESSON,PAPER CUTTING,QR CODE ETC

<u>முன்னறிவு:-</u>

நிதிநிலைப் பகுப்பாய்வு செய்வதற்கு பொது அளவு அறிக்கை, ஒப்பீட்டு அறிக்கை, விகிதப்பகுப்பாய்வு, ரொக்க ஓட்ட அறிக்கை போன்ற பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன என்று தொடர்படுத்தி விகிதப்பகுப்பாய்வை தொடர்தல்.

<u>பாட அறிமுகம்:-</u>

<u>ஆசிரியர் செயல்பாடு:-</u>

விகிதங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை

1. பாரம்பரிய அடிப்படை
2. செயல்பாட்டின் அடிப்படை

பாரம்பரிய அடிப்படையில், எந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து விகிதங்கள் கணக்கிடப்படுகின்றன என்பதன் அடிப்படையில் விகிதங்கள்

I. இருப்புநிலைக் குறிப்பு விகிதங்கள்
II. வருமான அறிக்கை விகிதங்கள் மற்றும்
III. அறிக்கைகளுக்கிடையேயான விகிதங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

செயல்பாட்டின் அடிப்படையில் எந்த நோக்கத்திற்தாக விகிதங்கள் கணக்கிடப்பட வேண்டுமோ, அதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது மற்றும் அது அதிகமாக வழக்கத்தில் பயன்படுத்திவரும் முறையாகும். செயல்பாட்டின் அடிப்படையில் விகிதங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன.

I. நீர்மைத் தன்மை விகிதங்கள்
II. நீண்ட கால கடன் தீர்க்கும் விகிதங்கள்
III. சுழற்சி விகிதங்கள்
IV. இலாபத் தன்மை விகிதங்கள்

<u>வலுவூட்டல்:-</u>

விகிதப் பகுப்பாய்வு என்பது பல்வேறு விகிதங்களைக் கணக்கிடுவதன் வாயிலாக நிதிநிலை அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தலை உள்ளடக்கிய ஒரு கருவியாகும்.

<u>மதிப்பீடு:-</u>

எளிய சிந்தனை வினா(LOT):

1. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம்.........

நடுத்தர சிந்தனை வினா(MOT):

1. முதலீடுகள் மீதான வருவாய் விகிதம் எதைக் குறிப்பிடுகிறது?

உயர் சிந்தனை வினா(HOT):

1. இயக்கலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

<u>குறைதீர் கற்றல்:-</u>

விகிதங்களின் வகைப்பாடு பற்றி புரிந்து கொள்வதில் சிரமப்படும் மாணவர்களுக்கு கீழ்வருமாறு விளக்குதல் ஒரு விகிதத்தின் இரு இனங்களும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டால், அது இருப்புநிலைக் குறிப்பு விகிதம் என்றும், வருமான அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டால் அது வருமான அறிக்கை என்றும், ஒரு இனம் வருமான அறிக்கையிலிருந்தும் மற்றொரு இனம் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து எடுத்து விகிதம் கணக்கிடப்பட்டால் அது அறிக்கைகளுக்கிடையேயான விகிதம் என விளக்குதல்.

<u>தொடர் பணி:-</u>

- பின்வரும் சூழல்களுக்கு சாத்தியமான காரணங்கள் மற்றும் விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.
- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு துறைவாரி பண்டக சாலையின் நிகர இலாப அளவு குறைந்துள்ளது.
- கடன் வசூலிப்புக் காலம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

வகுப்பு:12

பாடம் : **கணக்குப்பதிவியல்**

தேதி : **டிசம்பர் 1ம் வாரம்**

தலைப்பு : அலகு **10. கணினிமையக்கணக்கியல்**

Prepared by: M.Muthu Selvam

MLWA HSS Madurai 625 001

Cell: 9842104826

**கற்றல்நோக்கம் :**

1. தானியங்கும் கணக்கியல் முறையை புரிந்து கொள்ளுதல்

2. Tally.ERP9 ஐப் பயன்படுத்தி கணக்கேடுகளை பராமரித்தல் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றை மாணவர்கள்அறிந்து கொள்ளல்

**கற்றல்விளைவுகள் :**

Tally-ன்நுழைவாயில்

பெறுதல் சான்றாவணம்

செலுத்தல் சான்றாவணம்

எதிர்ப் பதிவு

கொள்முதல் சான்றாவணம்

விற்பனை சான்றாவணம்

உரிய குறிப்பேடு ஆகியவற்றை மாணவர்கள்அறிந்துகொள்ளல்

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :**

PPT, Videos, QR codes, Online tests and Online Games...,

**முன்னறிவு :**

சென்ற ஆண்டு 11 ஆம் வகுப்பில் கணக்குப்பதிவியலில் கணினிமயக் கணக்கியல் பாடத்தின் மூலமாக வணிகவியலுக்கு எவ்வாறு கணினி பயன்படுகிறது

மேலும் மைக்ரோ சாப்ட் ஆபீஸ் – MS-Word மற்றும் MS-Excel போன்றவற்றை மாணவர்களுக்கு நினைவூட்டல்

**பாட அறிமுகம்:**

தானியங்கும் கணக்கியல் முறை எந்த அளவிற்கு கணக்கியல் ஏடுகளை பராமரிப்பதற்கு பயனுள்ளதாக உள்ளது என்பதை அறிய ஒரு பெரிய நிறுவனத்தின் கணக்காளரை நேர்காணல் செய்துவரச் செய்தல்

**ஆசிரியர் செயல்பாடு:**

கணினிமயக் கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம். இதற்கு அதிகப்படியான இடவசதி தேவையில்லை. தரவு மற்றும் தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் எடுக்க இது வழிவகை செய்கிறது.

கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பு ஆகும். கணக்கியல் அறிக்கைகளை வழக்கமான அறிக்கைகள் மற்றும் குறிப்பிட்டநோக்க அறிக்கைகள் என வகைப்படுத்தலாம்.

வழக்கமான கணக்கியல் அறிக்கைகள்

(அ) நாளேடு / குறிப்பேடு (ஆ) பேரேடு (இ) இருப்பாய்வு (ஈ) இலாபஅறிக்கை (உ) இருப்புநிலைக் குறிப்பு (ஊ) ரொக்க ஓட்ட அறிக்கை

வழக்கமான கணக்கியல் அறிக்கைகள் தவிர பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் அறிக்கை குறிப்பிட்ட நோக்க அறிக்கை எனப்படும்.

2009-ம் ஆண்டு Tally Solutions, Tally. ERP9 எனும் மென் பொருளை அறிமுகம் செய்தது. இந்த மென் பொருள் விரிவான வணிக மேலாண்மைக்கு தீர்வு அளிக்கிறது.

**<u>மாணவர் செயல்பாடு :</u>**

கணக்கியல் மென் பொருளில் செய்முறைப் பயிற்சி - Tally

1. Starting Tally (Tally-ஐதுவங்க) பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் Tally-ஐ துவங்கலாம்

Click on Start > All Programs > Tally.ERP 9 > Tally.ERP 9 icon

(or)

Click on Tally.ERP 9 icon (shortcut) on the desktop

மேலும்

கம்பெனி உருவாக்குதல்

டேலியின் நுழைவாயில்

Tally-ல் இருந்து வெளியேறுதல்

நிறுவனத்தைத் தெரிவு செய்தல்

நிறுவனத்தின் பண்பு கூறுகள்

கணக்கியல் பண்பு கூறுகள்

சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்பு கூறுகள்

கணக்கியல் குழுக்களை உருவாக்குதல்

பேரேட்டு கணக்குகள்

குழு மற்றும் பேரேடு மாற்றம் செய்தல்

சான்றாவணங்கள்

போன்ற விவரங்களை செய்முறை பயிற்சி மூலம் மாணவர்களை செய்து பார்க்க சொல்லுதல்

**<u>மதிப்பீடு :</u>**

LOT

1. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

2. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?

MOT

1.Tally. ERP 9-ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?

2.Tally. ERP9-ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்..

**HOT**

பின்வரும் நடவடிக்கைகளை Tally-ல் பதிவு செய்யவும்.

(1) ₹ 4,00,000 முதலுடன் தேவி தொழில் தொடங்கினார்

(2) இந்தியன் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 60,000 செலுத்தியது.

(3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 15,000

**தொடர்பணி : ( கள ஆய்வு )**

கணக்கியல் மென்பொருளில் Tally மட்டுமே உள்ளதா? ஆராய்ந்து மேலும் சில கணக்கியல் செயல்பாட்டு மென்பொருள்களை மாணவர்களை கண்டறிய சொல்லுவேன்.